Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்
சகல நிகழ்வுகளுக்கும் ராசியான
ஸ்தாபனம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
T.P – 0777 286247.

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 வைகாசி– 04 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற–ஆகிர் 08 (18.05.2005) புதன்கிழமை இதழ்:231

### உள்நாட்டு விவகாரங்களை

## சர்வதேசத்தின்முன் கொண்டுசென்றதாக சந்திரிகா மீது ஜே.வி.பி. குற்றச்சாட்டு!

(கொழும்பு)

உள்நாட்டுப் பிரச்சினைகள், கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகள் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் முன்பாக ஜனாதிபதி சந்திரிகா கருத்து வெளியிட்டதை ஜே.வி.பி வன்மையாகக் கண்டிக்கிறது.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்து ஜனாதிபதி சந்திரிகா நிகழ்த்திய உரையில்– ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கூட்டாளிக் கட்சிகளைக் கடுமையாகச் சாடியிருந்தார்.

இது குறித்து ஜே.வி.பி நேற்று வெளியிட்ட கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது–

ஜனநாயகத்தின் உயர்நிலையைக் கொண்டுள்ள இலங்கையில் வெவ்வேறு ஜனநாயக அரசியல் கட்சிகளிடையே பல்வேறு எதிர்த்து வாதாடுகின்ற நிலைப்பாடுகள் உள்ளன. இது அவர்களது உரிமையாகும். ஒரு முறைமையான சர்வதேசக் குழுவின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## விரைவில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும்!

### உலக வங்கி பிரதித் தலைவர்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டியது அவசியம் – இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா அடுத்த சில தினங்களுக்குள் முக்கிய தீர்மானங்கள் எடுப்பது என்று உலக வங்கிப் பிரதிநிதி பிரபுல் பட்டேல் தெரிவித்தார்.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில் –

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவது (12 ஆம் பக்கம் பார்க்க)

### 3 பில்லியன் டொலர் வழங்கப்பட்டாலும்

# சமாதான முயற்சிகளைப் பொறுத்தே தடையின்றி நிதியுதவிகள் கிடைக்கும்!

## கண்டி மாநாட்டின் பின் நிதியமைச்சர்

(கொழும்பு)

கண்டியில் நேற்று முடிவடைந்த உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டின் மூலம் இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்ததைவிடவும் அதிகமாக 3 பில்லியன் டொலர் நிதியுதவி கிடைத்துள்ளதாகவும் –

எனினும், சமாதான முயற்சிகள் மற்றும் பொதுக்கட்டமைப்பு என்பன உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டால் மட்டுமே இந்த நிதி பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

உதவிவழங்கும் நாடுகளின் மாநாடு நேற்று கண்டியில் முடிவடைந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இந்த மாநாடு தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

(12 ஆம் பக்கம் பார்க்க)

### பொதுக்கட்டமைப்பு குறித்து

## கருத்து தெரிவிக்க கதிர்காமர் மறுப்பு!

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசாங்கம் உரியமுறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்தார்.

கண்டி மாநாடு தொடர்பாக நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தர்சிலை அகற்றப்படாவிடின் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்!

### குளக்கோட்டன் படைப்பிரிவு எச்சரிக்கை

(திருகோணமலை)

திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரச்சந்திக்கு அருகில் கடந்த ஞாயிறு அதிகாலை திடீரென நிறுவப்பட்ட புத்தர் சிலையை அங்கிருந்து உடனடியாக அகற்றவேண்டும். அல்லது அதனால் ஏற்படப்போகும் விளைவுகள் பாரதூரமானதாக அமையும் என்று குளக்கோட்டன் படைப்பிரிவு என்ற அமைப்பு எச்சரிக்கை விடுத்து துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

பிரசுரத்தின் முழு விபரம் வருமாறு –

தமிழர்களின் கலாசார பூமியில் சட்டம் ஒழுங்குகளையும் மீறி புத்தர் சிலை வைக்கப்பட்ட விடயத்தை பாரதூரமான (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஏழு பேரின் சடலங்கள் நேற்று நெடுந்தீவில் கரையொதுங்கின!

(நெடுந்தீவு)


தமிழ் நாட்டிலிருந்து மீன்பிடிப் படகு ஒன்றின் மூலம் தாயகம் திரும்பிய வேளை, படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் காணாமல் போனதாகக் கருதப்படும் ஏழு பேரின் சடலங்கள் நேற்றுக் காலை நெடுந்தீவில் அழுகிய நிலையில் கரையொதுங்கின.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ் நாட்டிலிருந்து படகு ஒன்றின் மூலம் தாயகம் திரும்பிக்கொண்டிருந்த போதே – நடுக்கடலில் கடும் காற்றினால் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் ஏழு பேர் காணாமல் போயிருந்தனர்.

எஞ்சிய ஏழு பேரும் நீந்தி மண்திட்டி ஒன்றில் கரையொதுங்கினர். பின்னர் இவர்கள் மீனவர்களின் உதவியுடன் (12 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை நகரில் புத்தர் சிலை

## கண்டித்து நடத்தப்பட்ட ஹர்த்தால்; வழமை நிலை முற்றாகப் பாதிப்பு!



(திருகோணமலை)

திருகோணமலை நகரின் மையப் பகுதியான மணிக்கூட்டுக் கோபுர சந்திக்கு அருகிலுள்ள நகரசபைக்கு சொந்தமான காணியில் ஞாயிறு அதிகாலை திடீரென 12 அடி உயரமான பாரிய புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டதைக் கண்டித்து திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவையால் அழைப்பு விடுக்கப்பட்ட ஹர்த்தாலால் திருமலை முற்றாக ஸ்தம்பிதமடைந்தது.

நேற்று திருகோணமலையில் பாடசாலைகள், அரச திணைக்களங்கள், வர்த்தக நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் வங்கிகள் என்பன செயற்படவில்லை.

நகரின் முக்கிய வீதிகள், சந்திகள் மற்றும் மணிக்கூட்டுக் கோபுரச் சந்திப் பகுதியில் பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

காலை 9.30 இற்கு கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில் பொலிஸ் அலுவலகத்தில் சர்வ மத தலைவர்களின் சமரசக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பௌத்த பிக்குமார், சிவன்கோவில் பிரதம குரு, இஸ்லாமிய குருமார், உவர்மலை குழந்தை இயேசு ஆலய பங்குத் தந்தை அருட்திரு சி.வி.அன்னதாஸ், தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொலிஸ் தரப்பில் – ஹர்த்தால் நடவடிக்கை விலக்கப்பட்டு இயல்பு நிலை ஏற்படுத்தப்படவேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

வைக்கப்பட்ட சிலை அகற்றப்படல் வேண்டும் அல்லது அகற்றுவதற்குரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அது தொடர்பான நீதிமன்ற உத்தரவு தமக்கு காண்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டால் மட்டுமே ஹர்த்தால் முடிவுக்கு கொண்டுவரப்படும் (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297,
077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# ஆலயத்திற்குச் செல்லும் பக்தர் மீது கடற்படையினரின் கெடுபிடி அதிகரிப்பு

பிரசித்த பெற்ற பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் மீது கடற்படையினரின் கெடுபிடிகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் யாவரும் இந்த ஆலயத்துக்கு சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ள பிள்ளையார் ஆலயம் ஒன்றின் அருகில் உள்ள கடற்படையினரின் வீதித் தடை முகாம் ஒன்றில் இடைமறிக்கப்பட்டு அவர்களது பைகள், உடைகள் என்பன பரிசோதனை செய்யப்பட்டு, பின்னர் அனைவருக்கும் ஒவ்வொரு இலக்கங்கள் வழங்கப்பட்டே ஆலயத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இது மட்டுமல்லாது குறிப்பிட்ட வீதித்தடை முகாமுக்கும் - பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்கும் இடைப்பட்ட 200 மீற்றர் தூரத்துக்குள் ஏழுக்கு மேற்பட்ட வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் போன்றன மிக உயரமாக போடப்பட்டுள்ள இந்த வீதி அணைகளின் மீது ஏறிச்செல்லும்போது வாகனங்களில் செல்லும் வயோதிபர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

அத்துடன் கைத்தொலைபேசிகள் புகைப்படக்கருவிகள் மற்றும் வீடியோ கருவிகள் எதனையும் குறிப்பிட்ட வீதித் தடைமுகாமுக்கு அப்பால் எடுத்துச்செல்ல படையினர் அனுமதிப்பதில்லை. இக்கருவிகளைக் கொண்டு வரும் பக்தர்களிடமிருந்து அவற்றை வாங்கி குறிப்பிட்ட முகாமில் வைத்திருந்து திரும்பச் செல்லும்போதே அவர்களுக்கு வழங்குகின்றனர்.

அத்துடன், மாலை 6 மணிக்கு பின்னர் இந்த முகாமுக்கு அப்பால் பொதுமக்கள் செல்வதற்கும் கடற்படையினர் தடைவிதித்துள்ளனர்.

இவ்வாறாக ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் சுதந்திரமாக தமது வழிபாடுகளை மேற்கொள்ளமுடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தினமும் இந்தச் செயற்பாடுகள் தொடச்சியாக நடைபெறுவதால் பக்தர்கள் தரப்பில் கடும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினரின் சோதனைக் கெடுபிடியை நீக்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் தலையிட்டு தமது சுதந்திரமான வழிபாட்டுக்கு வகை செய்ய வேண்டும் என்று பக்தர்கள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (207)

# மகளிர் நிறுவனம் நடத்தும் ஆற்றுப்படுத்தல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களை ஆற்றுப்படுத்தும் நோக்கில், அரங்க செயற்பாட்டுடன்கூடிய பல கருத்தரங்குகளை சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடத்திவருகிறது.

பொலி கண்டி கிழக்கில் கடற்தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து இன்னொரு அரங்க செயற்பாட்டு நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் மகளிர் குழுவினர் 'நான் அல்ல நாங்கள்' என்ற அரங்க நிகழ்வை நடத்தவுள்ளனர்.

இந்த நிகழ்வின் மூலம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகள் தொடர்பான விளக்கங்களும், அவற்றைத் தமது ஆற்றலுக்கேற்ப எதிர்கொள்ளும் வல்லமையும் இந்த நிகழ்வின் மூலம் வலியுறுத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் பார்வதி கந்தசாமி, தேசிய கல்வி நிறுவன இணைப்பாளர் தனலஷ்மி விஸ்வநாதன், பொலிகண்டி கடற்தொழிலாளர் சங்க செயலாளர் ஆ.சி.அமல்ராஜ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# திகதிகளை பெற்றுக்கொள்ள கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் தங்களுக்குரிய எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை ஆகியவற்றுக்கான திகதிகளை இன்று முற்பகல் 9.30 மணிக்கு தவறாது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு, யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பதில் உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், புதிய மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பங்களைக் கையளித்தவர்கள் - அந்த வாகனங்களின் பரிசோதனைக்காக இன்று முற்பகல் 10.30 மணிக்கு உரிய வாகனத்துடன் யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்கள அலுவலகத்திற்கு வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வித்துடல் விதைப்பு


(யாழ்ப்பாணம்)

கடந்த 15 ஆம் திகதி இரணைமடுவில் இடம்பெற்ற வாகன விபத்தில் சாவடைந்த லெப். செந்தாளன் (துரைராசா செல்வகுமார் - தாமரை வீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்) என்னும் மாவீரரின் வித்துடல் நேற்று மாலை அவரின் இல்லத்தில் இருந்து பாண்ட் வாத்திய இசையுடன் பாரதி சனசமூக நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டு வீரவணக்க நிகழ்வுகள் யாழ். கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.செழியன் தலைமையில் இடம்பெற்றது.

பொதுச்சுடரேற்றி மலர்மாலையை மாவீரரின் சகோதரிகள் அணிவித்தனர். தொடர்ந்து நினைவுரைகளை யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொருளாளர் சிவராசா, பாரதி சனசமூக நிலையத் தலைவர் கணேஸ்வரன், மாவட்ட மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பக பொறுப்பாளர் நர்மதன் ஆகியோர் ஆற்றினர்.

தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் மாவீரரின் வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இறுதி வீரவணக்க உரையையடுத்து பூரண இராணுவ மரியாதையுடன் புனித விதைகுழியில் வித்துடல் விதைக்கப்பட்டது.

# சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

சிலைடர் அரச சார்பற்ற நிறுவனத்தால் வலுவிழந்தோருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.

சக்கர நாற்காலிகளை வழங்கும் நிகழ்வு நேற்றுக்காலை 10.00 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது கொழும்பிலிருந்து வருகை தந்த இந்த நிறுவன அதிகாரிகளால் யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியிடம் சக்கர நாற்காலிகள் கையளிக்கப்பட்டன.

இந்த சக்கர நாற்காலிகள் உடுவிலில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்டுகிறது.

# வெடிபொருட்கள் அகற்றிய பிரதேசம் நேற்று விவசாயிகளிடம் கையளிப்பு!





அரியாலை கிழக்கு பூம்புகார் பகுதியை அண்டிய பகுதிகளில் இராணுவ கண்ணி வெடி அகற்றும் பிரிவினால் துப்புரவு செய்யப்பட்ட 800 மீற்றர் நீளமான விவசாய நிலங்களில் பயிர் செய்கை மேற்கொள்ளமுடியும் என்று இராணுவ கண்ணிவெடி அகற்றும் பிரிவு பொறுப்பதிகாரி கப்டன் சஞ்சீவ் தெரிவித்தார்.

மேற்படி பகுதியில் அமைந்துள்ள இராணுவ உயர் பாதுகாப்பு வலயப் பகுதியை அண்டிய பகுதியில் துப்புரவு செய்யப்பட்ட விவசாய நிலங்களை விவசாயிகளிடம் கையளிக்கும் வைபவம் நேற்று நடைபெற்ற போது - அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் - இந்தப் பகுதியில் 1315 மிதி வெடிகளும், 45 வெடிக்காத ஏனைய வெடிபொருட்களும் தமது பிரிவினரால் அகற்றப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் விவசாயிகள் மற்றும் நல்லூர் பிரதேச செயலர், யுனிசெப், யு.என்.எச்.சி.ஆர் சிறுவனத்தினர், இராணுவ அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தப் பகுதி கடந்த 4 வருடங்களுக்கு மேலாக பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாமல் வெடிபொருட்கள் அபாயம் சூழ்ந்த பகுதியாக காணப்பட்டமை குறிப்பித்தக்கது.

# அலங்காரப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப் பயிற்சி நிறுவனம் அலங்காரக் காட்டுருக்கள் என்ற தமது நிறுவன வெளியீடு ஊடாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்திய ஆக்க அலங்காரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரங்களை வெளியிட்டுள்ளது.

முதலாம் இடம் - பசுபதி றாம்ஜி (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), இரண்டாம் இடம் - சர்மிளா சந்திரதாசன் (பண்டத்தரிப்பு உயர்தர பாடசாலை), தயாளினி கிறிஸ்டின் (சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் - டியூளினி கிறிஸ்ரியன் (திருக்குடும்ப கன்னியர் மடம்), பனேந்திரன் ஜனோர் எமேர்ஷன் (புனித பத்திரிசியார்கல்லூரி).

# கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு பொன்.சிவகுமாரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டப் போட்டியில் இன்று இறுதியாட்டத்தில் மோதவுள்ள பாடசாலை அணிகளின் விபரம் வருமாறு -

காலை 9 மணிக்கு பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும் மோதுகின்றன.

ஆண்கள் பிரிவில் யாழ்.மத்திய கல்லூரியும், யாழ்.இந்துக் கல்லூரியும் மோதுகின்றன. இந்த இரு போட்டிகளும் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

# கலந்துரையாடல்

ஐக்கிய நாடுகள் வதிவிடத் திட்டத்தின் சமூக மீள் கட்டுமானத்துக்கு இருபது லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்வது தொடர்பாக, கந்தர்மடம் வடகிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 5 மணிக்கு நல்லூர் ஜன சக்தி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமூக அபிவிருத்தியை கருத்தில் கொண்டு மேற்படி பிரிவுக்குட்பட்டவர்களை இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்மாறு கிராம அலுவலர் கேட்டுள்ளார்.


மனோகரா யாழ்ப்பாணம்

சரத்குமார்,
அறிமுகம் ரமேஷ்,
பூஜா,
கலாபவன் மணி
மற்றும்
பலர் நடித்த



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு,ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்

(C/3979)




50 ஆவது நாளை நோக்கி...

காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00,7.00,

ராஜா யாழ்ப்பாணம்

19 வரை

தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த




பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

20 ஆம் திகதி முதல்

அர்ஜுன், லைலா நடித்த

ஜெய்சூர்யா



கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
1954
01
02



மறைவு
2005
05
16

அமரர் இராமுப்பிள்ளை சிவராஜா

(யாழ்ப்பாண பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் - உயர்தரம்)

"மீளாத் துயிலில் கொண்டு எம்மை
ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீரோ"

கலையாத உம் நினைவுகளுடன் காலமெல்லாம் காத்திருக்கும் குடும்பத்தினருடன் நாமும் இணைந்து ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். அமரரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்
யாழ்.பல்கலைக்கழகம்

(1162)

# கண்டி மாநாட்டுக்கு அழைப்பில்லை; தமிழ்தேசிய கூட்டமைப்பு கண்டனம்!

(கொழும்பு)

கண்டியில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் யுத்தத்தாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் பிரச்சினைகள் குறித்து எடுத்துக்கூற வாய்ப்பளிக்கப் படாமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக நிதியமைச்சர் சரத் அமுனுகமவுக்கு - நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் எழுதியுள்ள கடிதத்தில் -

கண்டி மாநாட்டின் தொடக்க விழாவுக்கான அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றது. ஆனால், மே 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் தொடர்பான கருத்தரங்குக்கு நாம் அழைக்கப்படவில்லை.

நான் தலைவராகக் கடமையாற்றுகின்ற தமிழரசுக் கட்சியானது - கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் 22 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

வடக்கு - கிழக்கின் மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 31. இதில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களை எமது தமிழரசுக் கட்சி பெற்றுள்ளது.

இந்த உண்மையை உணர்ந்து கொள்ளாமல் - எம்மை அங்கீகரிக்க விருப்பமில்லாமல் வடக்கு - கிழக்கு மக்கள் அளித்த ஜனநாயக வழித் தீர்ப்பை ஏற்காமல் அரசுத் தரப்பு எம்மைப் பிரித்தே பார்க்கிறது.

இரண்டு நாள் நிகழ்வில் முதல் மற்றும் 2 ஆம் அமர்வுகளில் சுனாமி மீளமைப்புப் பணிகள் குறித்து விவாதிக்கப்படவுள்ளன.

சுனாமியால் 70 வீத உயிரிழப்புக்களையும், சேதங்களையும் எதிர்கொண்டிருப்பது தமிழர்கள் வாழும் வடக்கு - கிழக்குப் பகுதியே. ஆகையால், இந்த இரண்டு அமர்வுகளிலும் இதுகுறித்து விவாதிக்கவே அதிக நேரம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

நான்காம் அமர்வாகிய அமைதி மற்றும் வளர்ச்சிப் பணிகளின் பங்காளிகள் என்ற அமர்வும். ஒட்டுமொத்தமாக வடக்கு - கிழக்கில் தமிழ் பேசுகின்ற மக்கள் தங்கள் பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கான வாய்ப்பு இந்த மாநாட்டில் அளிக்கப்படவில்லை.

சுனாமி காலத்தில் சர்வதேச நாடுகளின் தலைவர்களைப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசங்களைப் பார்வையிடாமல் தடுத்து, உண்மை நிலைகளை அவர்கள் உணர்ந்துவிடாமல் செயற்பட்டதைப் போலவே அரசு தற்போதும் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

மூன்றாண்டுகளாக யுத்தநிறுத்த ஒப்பந்த அமுலில் இருக்கின்றபோதும், இடப்பெயர்வுக்குள்ளான தமிழ் மக்கள் இன்னமும் தங்கள் சொந்தக் கிராமங்களில் மீளக்குடியமர முடியாத நிலை நீடித்து வருகிறது.

அவர்கள் அகதிகளாகவே முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்துகளை நிறைவேற்ற அரசு தவறிவிட்டது.

சிதைவடைந்து நிற்கும் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்பவேண்டியது மிக அவசியமானதாக இருந்தபோதும், நீண்டகாலமாக அதை அரசுத் தரப்பு புறக்கணித்து வருகிறது. கடுமையாகப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் சுனாமி மீளமைப்புப் பணிகள் ஓரளவே நடந்துள்ளதால், தொடர்ந்து மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

தற்போதைய மாநாட்டில் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்குப் பாரிய முக்கியத்துவம் அளித்து - பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு ஆறுதலை அளிக்க வேண்டும். இந்த மாநாட்டுக்கான உங்களின் நிகழ்ச்சி ஒழுங்கமைவுகள் குறித்து மிகவும் வருந்துகிறேன் என்று அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலாபமீட்டாத நிறுவனங்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்படமாட்டாது!

## சர்வதேச நிதிநிறுவனங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

இலாபமீட்டாத மின்சாரசபைக்கு நிதியுதவி அளிக்கமுடியாதென சர்வதேச நிதிநிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இலங்கை மின்சாரசபை ஊழியர்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், ஆசிய அபிவிருத்திவங்கி மற்றும் ஜப்பானிய அபிவிருத்தி ஒத்துழைப்பு வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கடந்த புதனன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போதே இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபை மறுசீரமைக்கப்படாத பட்சத்தில், அதற்கான அனைத்து நிதியுதவிகளையும் தாங்கள் நிறுத்தப்போவதாக இந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

தற்போதுள்ள நிலையில் மின்சாரசபையானது இலாபமீட்டும் ஒரு நிறுவனமாகச் செயற்படமுடியாது என்பதைச் சுட்டிக்காட்டிய அவர்கள், இவ்வாறான நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்க முடியாதென்றும் தெரிவித்தனர்.

இதேவேளை - மின்சாரசபை மறுசீரமைப்புத் தொடர்பான அமைச்சரவை அங்கீகாரம் மீளப்பெறப்பட்டுள்ளது. ஜே.வி.பியின் அழுத்தங்களை அடுத்து இந்த அங்கீகாரம் ரத்துச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுமி மீது பாலியல் வல்லுறவு; வயோதிபர் விளக்கமறியலில்!

(மன்னார்)

பன்னிரண்டு வயது மாணவி ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய வயோதிபரை - இந்த மாதம் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த புதனன்று ஹர்த்தால் தினத்தில் ஆஸ்பத்திரி வீதியில் வர்த்தக நிலையத்தின் பின்புறத்தால் பொருட்களை விற்பனை செய்துகொண்டிருந்தவேளை மேற்படி சிறுமி பொருட்களை வாங்கச் சென்றுள்ளார்.

இதன்போது ஆட்கள் எவரும் இல்லாத வேளை - தனித்து நின்ற சிறுமியை வயோதிபர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியுள்ளார்.

இதை அடுத்து சிறுமி சம்பவம் தொடர்பாக பெற்றோருக்குத் தெரிவித்ததை அடுத்து மன்னார் பொலிஸாரால் சம்மந்தப்பட்ட 60 வயதுடைய வயோதிபரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு இவரை எதிர்வரும் 21 ஆம் திகதிவரை வளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (201)

# பொதுக்கட்டமைப்பு என்ற பெயரை ஜனாதிபதி சந்திரிகா மாற்றத்திட்டம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளை மீளமைக்க அமைக்கப்படவுள்ள பொதுக் கட்டமைப்பின் பெயரை மாற்றியமைக்க - ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதாக அரச சமாதான செயலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி சுனாமியின் பின்பான முகாமைத்துவ செயற்பாட்டு வியூகம் என்று இது பெயரிடப்படும்.

ஜனாதிபதியும், அதிகாரிகளும் கலந்தாலோசித்த பின்பே இந்தப் பெயரை மாற்றுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சுனாமியின் பின்பான முகாமைத்துவ வியூகத்தின் மூலம் சுனாமியால் இடம்பெயர்ந்த வடக்கு - கிழக்கு மக்களுக்குச் சேவை செய்யும்போது நலன்புரி நடவடிக்கைகள் மாத்திரம் நிகழும் என்று சமாதானச் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த மாத முடிவிலோ, ஜூன் மாதத்தின் முதல் வாரத்திலோ இந்த முகாமைத்துவ ஆவணத்தில் அரசும், விடுதலைப் புலிகளும் கையொப்பம் இடுவார்கள் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தே)

# பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கும் சம அளவு அதிகாரம் தர வேண்டுமாம்!

## பேரியல் அஷ்ரப்



விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதாக இருந்தால், அதில் இன்னுமொரு சம அளவிலான பங்காளிகளாக முஸ்லிம் பிரதிநிதிகளும் உள்வாங்கப்படுவது அவசியம் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் தெரிவித்தார்.

நோர்வே பிரதிநிதி எரிக்சொல்ஹெய்மைச் சந்தித்தபோது இவ்வாறு அழுத்தம் கொடுத்துள்ள பேரியல் அஷ்ரப் - விடுதலைப்புலிகளுக்கோ, அரசுக்கோ அடுத்த அளவில் அல்லாது சம அளவிலான ஒரு பங்காளியாகவே தன்னையும் இணைப்பது அவசியம் என்றும்,

பொதுக்கட்டமைப்பின் மூலமாக தமிழ் பிரதேசங்களைப் புனர்நிர்மாணம் செய்யும் தேவையிருந்தால் அதைத் தடுக்கும் எண்ணம் தனக்கு இல்லை என்றும் தெரிவித்த பேரியல் அஷ்ரப் -

அதற்காக உருவாக்கப்படும் பொதுக்கட்டமைப்பில் மூன்று சம அளவிலான பங்காளிகளாக மூன்று சமூகத்தையும் இணைப்பதே சரியானது என்று கூறினார்.

# யாழ்.வர்த்தகரின் கடன் அட்டையை திருடியவர் கம்பஹாவில் கைது!

(கொழும்பு)

யாழ்ப்பாண வர்த்தகர் ஒருவரின் கடன் அட்டையை திருடி, அதிலிருந்து சுமார் 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவைப் பெற்றதாகக் கூறப்படும் ஒருவரை கம்பஹா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர் கொழும்பில் வைத்து குறிப்பிட்ட கடன் அட்டையைத் திருடியுள்ளார். இதன் போது அந்தக் கடன் அட்டையில் 2 கோடி ரூபா மீதம் இருந்துள்ளது.

இந்த நிலையில் தொடர்ந்தும் பணத்தை எடுத்து வந்த அந்த நபர் - மீண்டும் ஒரு முறை பணத்தைப் பெறுவதற்காக தன்னியக்க பணம் பெறும் கருவியினுள் கடன் அட்டையைச் செலுத்தியுள்ளார். ஆனால், கடன் அட்டை தன்னியக்க பணம் பெறும் கருவியினுள் இருந்து வெளியில் வராமையை அடுத்து வங்கியின் முகாமையாளரிடம் முறையிட்ட போதே அவரின் திருட்டு விடயம் வெளியானது. குறிப்பிட்ட நபரை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொருளாதாரத் தடை நீக்கப்படாவிட்டால் அரச நிர்வாகத்தை முடங்கச் செய்வோம்

## திருமலை தமிழ் மக்கள் பேரவை எச்சரிக்கை

(திருகோணமலை)

மூதூர் கிழக்குப் பிரதேச மக்கள் மீதான பொருளாதாரத் தடை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் நீக்கப்படாவிட்டால் - திருமலையில் அரச நிர்வாகத்துக்கு எதிராகத் தொடர்ச்சியாகச் சாத்வீக வழியில் எதிர்ப்புத் தெரிவித்து, அரச நிர்வாகத்தை ஸ்தம்பிதமடையச் செய்வோம் என, திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது -

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்கள் முடிவடைந்த நிலையில், தமிழ்பேசும் மக்களாகிய எமக்குக் கிடைத்தது எதுவுமேயில்லை.

சர்வதேச நாடுகளை ஏமாற்றும் முயற்சியாக அரசாங்கம் பாசாங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு, மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும் எதிராகப் பல்வேறு சதி முயற்சிகளிலும், யுத்தத்துக்கான ஆயத்த வேலைகளிலும் ஈடுபட்டுவருகிறது.

சமாதானத்தை மீறும் பல நடவடிக்கைகளை மேற் கொண்டுவருகிறது.

திருகோணமலை மாவட்டத்தின் இதயமாக விளங்கும் மூதூர் கிழக்குப் பிரதேசத்துக்குப் பொருளாதாரத் தடையை விதித்திருப்பது அநீதியின் உச்சக்கட்டமாகும்.

சுனாமி அனர்த்தத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டும், யுத்தத்தால் பாதிக்கப்பட்டும் அவல வாழ்க்கை வாழும் மக்கள்மீது மீண்டும் அடாவடித்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச மக்களுக்காகக் குரல்கொடுக்கவேண்டியது எம் ஒவ்வொருவரதும் தார்மீகக் கடமையாகும்.

எமது விடுதலைப் போராட்டத் தீ - கிளர்ந்தெழுவதற்கு நெய்யாக இருந்த இந்த மக்கள், விடுதலைப் போராட்டம் என்னும் கிளை விட்டுப்பரந்த பெரு விருட்சமாக இருப்பதற்கு நீராக இருந்த இந்த மக்கள், விடுதலைப் போராட்டத்துக்கு உடல், பொருள், ஆவி அனைத்தையும் தந்த இந்த மக்கள், எமது தாயகத் தலைநகரிலும் தாம் தலைநிமிர்ந்து நடப்பதற்கு காரணமாக இருக்கும் இந்த மக்கள் - துயரத்தில் துடிப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது.

ஏழ்மையிலும், துயரத்திலும் வாழும் இந்த மக்களின் துன்பம் தொடர்கதையாவதை இனியும் அனுமதிக்கமுடியாது.

மூதூர் கிழக்கு பிரதேசத்துக்கான பொருளாதாரத் தடை அரசின் திட்டமிட்ட நடவடிக்கையாகும். இதனை உடனே நிறுத்தவேண்டும்.

எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் இந்தத் தடை நீக்கப்படாவிட்டால், திருகோணமலை மாவட்டத்தில் அரச நிர்வாகத்துக்கு எதிராக தொடர்ந்து சாத்வீக வழியில் எமது எதிர்ப்பைத் தெரிவித்து, அரச நிர்வாகத்தை ஸ்தம்பிதமடையச் செய்வோம்.

இது தவிர்க்கமுடியாததாகும். எனவே தமிழீழ மக்களாகிய உங்களது பூரண ஒத்துழைப்பையும், அர்ப்பணிப்பையும் எம் உடன்பிறப்புகளாகிய மூதூர் கிழக்கு பிரதேச மக்களுக்காக வேண்டிநிற்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை ஜனாதிபதி வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# கோட்ட ரீதியான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயத்தில் கல்வித் தகவல் தளத்துக்கான செயலமர்வு ஒன்று கோட்ட ரீதியாக நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய நல்லூர் கோட்டத்துக்குரிய கல்வித் தகவல் தளத்துக்கான செயலமர்வு - இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ்ப்பாணக் கோட்டத்துக்கான கல்வித் தகவல் தளத்துக்கான செயலமர்வு - நாளை யாழ்.வலயக் கல்விப் பணிமனையிலும், கோப்பாய் கோட்டத்துக்கான செயலமர்வு - நாளை மறுதினம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது என யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# ஒருநாள் பயிற்சி ஆட்டத்தில் அப்ரிடியின் அதிரடி விளாசல்!

## 46 பந்துகளில் 104 ஓட்டங்கள்



(சென்.ஜோன்ஸ்)

மேற்கிந்தியத் தீவுககளில் சுற்றுப் பயணம் செய்யும் பாகிஸ்தான் அணி, அன்டிகுவா - பர்புடா லெவன் அணிக்கு எதிரான ஒருநாள் பயிற்சிப் போட்டியில் 248 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஜேக்கப்ஸ் தலைமையிலான அன்டிகுவா அணியுடனான இந்த ஆட்டத்தில் முதலில் பாகிஸ்தான் துடுப்பெடுத்தாடியது. பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 366 ஓட்டங்களைக் குவித்தது.

அப்ரிடி 46 பந்துகளில் 104 ஓட்டங்களை எடுத்தார். அதில் ஆறு சிக்ஸர்களும் அடங்கும்.

யுகானா 79 பந்துகளில் 7 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 87 ஓட்டங்களையும், யுனுஸ்கான் 83 பந்துகளில் 53 ஓட்டங்களையும், கம்ரன் அக்மல் 56 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இதையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அன்டிகுவா அணி 32.4 ஓவர்களில் 118 ஓட்டங்களை மட்டும் எடுத்து ஆட்டமிழந்ததால்-248 ஓட்டங்களால் தோல்விகண்டது.

அன்டிகுவா அணியின் துடுப்பாட்டம் மிக மோசமாக இருந்தது. சகல துறை ஆட்டக்காரரான விஸ்டல்



கோன்வல் மட்டும் 44 பந்துகளில் 46 ஓட்டங்களை எடுத்தார். இவர் மட்டுமே குறிப்பிடத்தக்கதான ஓட்டங்களைப் பெற்றார்.

இந்தப் போட்டியில் பந்து வீச்சிலும் அப்ரிடி அசத்தினார். இவர் 6.4 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதேவேளை மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரின் முதல் ஆட்டம் இன்று சென்.வின்சென்றில் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் - பாகிஸ்தான் அணிக்குமிடையில் நடைபெறவுள்ளது.

## கணேசகுமார் கிண்ண கிரிக்கெட்

# காலிறுதி ஆட்டத்தில் பல்கலை அணி வெற்றி!

(யாழ்ப்பாணம்)

சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 50 ஓவர்களைக் கொண்ட டொனால்ட் கணேசகுமார் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை கிறாஸ்கொப்பர்ஸ் அணியை இலகுவாக வெற்றிகொண்டு அரையிறுதிப் போட்டிக்கு யாழ்.பல்கலைக்கழக அணி தகுதிபெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தக் காலிறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பளை கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம் 34.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பிரகலாதன் 38 ஓட்டங்களையும், மயூரன் 14 ஓட்டங்களையும், கிருபா 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பல்கலைக்கழக அணியின் சார்பில் அருள்ராஜ் 3 விக்கெட்டுக்களையும், ஜெயந்தன், கௌரிபாகன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 12.1 ஓவர்களிலேயே 3 விக்கெட்டுக்களை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்று இந்தப் போட்டியில் இலகுவாக வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இதில் யாழ்.பல்கலைக்கழக ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மணிவண்ணன் 14 பந்துகளில் 39 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதில் 4 சிக்ஸர்களும், 2 பவுண்டரிகளும் அடங்கும்.

மற்றும் யாழ்.பல்கலைக்கழக அணித் தலைவர் தனுஸ்காந்தன் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும், ஜெயந்தன் ஆட்டமிழக்காமல் 11 ஓட்டங்களையும், ராஜிவ் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் தெல்லிப்பளை கிறாஸ்கொப்பஸ் வீரர்கள் அச்சுதன், சிறி, திலீபன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

எதிர்வரும் சனிக்கிழமை 21ஆம் திகதி வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதும் அரையிறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. (58)

# பிரான்ஸ் தகுதிச் சுற்றில் சானியா தோல்வியுற்றார்!


(புதுடெல்கி)

பிரான்ஸில் நடைபெறும் ஸ்டார்ஸ் பேர்க் ஓபன் ரெனிஸ் போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்திய வீராங்கனை சானியா மிர்சா தோல்வியடைந்தார்.

முதல் தகுதிச் சுற்று ஆட்டத்தில் 6-1, 6-1 என்ற கணக்கில் ஜேர்மனியின் ஸ்வெஞ்சா வீட்மானை வென்றார் மிர்சா. ஆனால், இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் 3-6, 3-6 என்ற கணக்கில் உக்ரைனின் ஜுலியா லகுலென்கோவிடம் தோல்வியடைந்தார்.

காயம் காரணமாக சிறிதுகாலம் எந்தப் போட்டியிலும் விளையாடாமல் இருந்தார் சானியா.

முக்கிய சுற்று ஆட்டத்துக்குத் தகுதி பெறாத நிலையில், உலக மகளிர்



தரவரிசைப் பட்டியலில் தொடர்ந்து 464 புள்ளிகளுடன் 72ஆவது இடத்தில் சானியா உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பல்கேரிய எம்டெல் மாஸ்டர்ஸ் செஸ்

# நான்காவது சுற்று ஆட்டத்திலும் விஸ்வநாதன் ஆனந்த் சமனிலை!

எம்டெல் மாஸ்டர்ஸ் செஸ் சம்பியன் போட்டியின் நான்காவது சுற்றிலும் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் சமனிலை பெற்றார்.

பல்கேரியாவில் உள்ள சோஃபியா நகரில் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற 4ஆவது சுற்று ஆட்டத்தில், ஹங்கேரியின் ஜுடிட் போல்கருடன் ஆனந்த் சமனிலை பெற்றார்.

இந்தப் போட்டியில் இதுவரை தான் விளையாடிய 4 சுற்று ஆட்டங்களில் ஆனந்த் தொடர்ந்து சமனிலை பெற்றார்.

செஸ் சம்பியனான ஆனந்தும், மகளிர் தரவரிசையில் உலகின் முதல்நிலை வீராங்கனையுமான போல்கரும் இதற்கு முன்பு பலமுறை மோதியுள்ளனர். அதில் 3இல் இரண்டு பங்கு ஆட்டங்களில் முடிவுகள் தெரிந்துள்ளன.

கறுப்பு காய்களுடன் விளையாடிய ஆனந்த், தொடக்கத்தில் சிறப்பான நகர்த்தலை செய்து போல்கரை திணறடித்தார். ஆனால், ஆட்டம் முன்னேற, முன்னேற இருவரும் சமனிலையில் இருந்தனர். நீண்ட போராட்டத்துக்குப் பின்பு 70ஆவது நகர்த்தலுக்குப் பின்னர் இருவரும் சமன் செய்துகொள்ள ஒப்புக்கொண்டனர்.

அடுத்த சுற்றில் இங்கிலாந்தின் மைக்கல் அடம்ஸை சந்திக்கவுள்ளார் ஆனந்த்.



மற்ற 4ஆவது சுற்று ஆட்ட முடிவுகள் -

பல்கேரியாவின் வாசெலின் தபலோவ், ரஷ்யாவின் விளாடிமிர் கிராம்னிக் இடையேயான ஆட்டம் சமனிலையில் முடிவுற்றது.

இங்கிலாந்தின் மைக்கல் அடம்ஸ், உக்ரைனின் ருஸ்லான் போனோமரோவ் இடையேயான ஆட்டமும் சமனிலையில் முடிவுற்றது.

புள்ளிப் பட்டியல் -

4ஆவது சுற்றுக்குப் பின்பு மைக்கல் அடம்ஸ் 2.5 புள்ளிகளுடன் தொடர்ந்து முன்னிலையில் உள்ளார்.

ஆனந்த், கிராம்னிக், போல்கர், தபலோவ் தலா 2 புள்ளிகளுடன் அடுத்த நிலையில் உள்ளனர். போனோமரோவ் 1.5 புள்ளிகளுடன் உள்ளார்.

# விளையாட்டு

## இந்தியா புதிய பயிற்சியாளரை

# நியமிக்கும்வரை காத்திருப்பதற்கு இலங்கை கிரிக்கெட் சபை முடிவு!

(கொழும்பு)

இந்திய கிரிக்கெட் அணிக்கு புதிய பயிற்சியாளரைத் தெரிவு செய்யும் வரை இலங்கை அணிக்கு புதிய பயிற்சியாளரைத் தெரிவு செய்யும் நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

விரைவில் இலங்கை கிரிக்கெட் அணிக்கு புதிய பயிற்சியாளரைத் தெரிவு செய்யவுள்ளோம். ஆனால் இந்திய கிரிக்கெட் அணிக்கு புதிய பயிற்சியாளரைத் தெரிவு செய்யும் வரை காத்திருக்கவுள்ளோமென இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தைக் கவனிக்க அரசு நியமித்துள்ள புதிய குழுவின் தலைவர் ஜயந்த தர்மதாஸ தெரிவித்தார்.

உலகிலேயே அதிக நிதியைக் கொண்ட சபையாக இந்திய கிரிக்கெட் சபை திகழ்கிறது. அதேபோல் இந்திய அணியின் பயிற்சியாளராகத் தெரிந்தெடுக்கப்படுவது கௌரவமாகக் கருதப்படுகிறது. அதனால் காத்திருக்க முடிவு செய்துள்ளோமென அவர் தெரிவித்தார்.

இந்திய அணியின் பயிற்சியாளராக இருந்த ஜோன் ரைட், பதவியிலிருந்து விலகினார். அதேபோல் ஜோன் டைசன் விலகியதால் ஏற்பட்டுள்ள இடத்தை நிரப்ப இலங்கை முயற்சி மேற்கொண்டுள்ளது.

இரு நாட்டு புதிய பயிற்சியாளருக்கான பட்டியலில் அவுஸ்ரேலியாவின் கிரேக் சப்பல், ரொம் மூடி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்திய பயிற்சியாளருக்கான பட்டியலில் இடம்பெற்றுள்ள சப்பல், மூடி, மொஹிந்தர் அமர்நாத், மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்மன்ட் ஹெயின்ஸ் ஆகியோரை சபை அதிகாரிகள் டெல்கியில் எதிர்வரும் வியாழக்கிழமை சந்திக்கவுள்ளனர்.

அதன் பின்னர் சப்பல் மற்றும் மூடியை இலங்கைக்கு அழைத்துப் பேச இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

# பரகுவே ஓபன் ரெனிஸ் சபினா சம்பியனானார்!

(பராகுவே)

பரகுவே ஓபன் ரெனிஸ் தொடரில் டயனரா சபினா சம்பியன் பட்டம் வென்றார்.

முன்னணி வீராங்கனைகள் பங்கேற்ற இந்தத் தொடர் செக் குடியரசில் உள்ள பரகுவே நகரில் நடைபெற்றது. பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் நட்சத்திர வீரர் மாரட் சபினின் தங்கை டயனரா சபினா, செக் குடியரசின் ஜூஸானா ஆன்ட்ரஸ்கோவை எதிர்த்து விளையாடினார்.

உலகின் 34ஆம் நிலை வீராங்கனையான சபினா 7-6, 6-3 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார். 19 வயதாகும் இவர் இந்த ஆண்டில் பெறும் இரண்டாவது பட்டம் இது



வாகும். கடந்த பெப்ரவரியில் நடைபெற்ற பரிஷ் ஓபன் தொடரில் கிண்ணம் வென்றார்.

# ஜெயரட்ணசிங்கம் கிண்ண கிரிக்கெட் இறுதியாட்டத்தில் மானிப்பாய் பரிஷ்!

வி.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் விளையாட மானிப்பாய் பரிஷ் அணி தகுதிபெற்றது.

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் மூன்றாவது வருடமாக நடத்தி வரும் 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டம் கடந்த 14ஆம் திகதி ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மானிப்பாய் பரிஷ் அணி 46.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது. ஜெயராஜ் 33, ராஜ்குமார் 26, பார்த்தீபன் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் தனுஸ் 3, செல்வராசா 2, காந்தன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

203 ஓட்டங்களுக்கு பதிலளிக்கு முகமாக களமிறங்கிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி 35.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது. காந்தன் 23, தனுஸ் ஆட்டமிழக்காது 49, குணதரன் 31 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ராஜ்குமார் 4, பாஸ்கரன் 2, சாத்வீகன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி 11 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

கடந்த வருடம் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி இந்தச் சுற்றுக் கேடயத்தைச் சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரதேச செயலகங்களிடையே உதைபந்தாட்டப் போட்டிகள்!

யாழ்.மாவட்ட எல்லைக்குட்பட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த 16ஆம் திகதி ஆரம்பமாகி 31ஆம் திகதி வரையும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பமாகி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்று வருகின்றது.

ஆண்கள் பிரிவுக்கான போட்டிகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இந்த மாதம் 16ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெண்கள் பிரிவுக்கான போட்டிகள் இந்தமாதம் 30ஆம், 31ஆம் திகதிகளில் யாழ்.பொது விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இது தவிர ஆண், பெண் பிரிவுகளிடையே தனித்தனியே மென்பந்து கிரிக்கெட், எல்லே, கரப்பந்தாட்டம், கபடி போன்ற போட்டிகளையும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (58)

★ இல 21 முதல் 25 வரையுள்ள எழுத்துக்களை விடையின் கீழ்க் கோடிடுக.

21. வேறுபட்ட ஒரு பொருள் எது?
(1) புத்தகம் (2) சஞ்சிகை
(3) நூலகம் (4) கையேடு

22. மக்கா எவ்வின மக்களின் புனித தலம்?
(1) மலாயர்கள் (2) பௌத்தர்கள்
(3) முஸ்லிம்கள் (4) கிறிஸ்தவர்கள்

23. இயற்கை அழகு மிக்க கடற்கரைகள் எமது நாட்டுக்குப் பாரிய அளவில் தரும் அந்நிய வருமானம் யாது?
(1) மீன்பிடி (2) சுற்றுலா
(3) ஹோட்டல்கள் (4) உப்பு

24. நிறக்கடதாசிகள் பலவற்றைக் கிழித்து ஒட்டுவதன் மூலம் செய்யும் ஆக்கம் பின்வருவனவற்றுள் எது?
(1) கைவேலைச் சித்திரம்
(2) பல்கலை
(3) ஒட்டுச்சித்திரம்
(4) கொலாஜ்

25. மாற்றான் உறவு அழிவைத் தரும் இங்கு மாற்றான் என்பது
(1) பகைவன் (2) நண்பன்
(3) நல்லவன் (4) அயலவன்

★ இல 26 முதல் 29 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்க மான விடை தருக.

26. பாடம் படிக்கிறேன் என்பதன் எழுவாய், பயனிலையை எழுதுக.
..........................................................................

27. எறிந்தாய் என்பதன் எதிர்காலம் யாது?
..........................................................................

28. தூக்கம் வந்தால் தானாகவே மூடும் கதவுகள் எவை?
..........................................................................

29. நஞ்சு என்பதன் ஒத்த சொல் தருக?
..........................................................................

★ இல 30 முதல் 34 வரை சரியாயின் சரி எனவும், பிழை யாயின் பிழை எனவும் எழுதுக.

30. அஞ்சல் அலுவலகங்களில் நோயாளிகளுக்குச் சிகிச்சை கொடுக்கப்படும் ( )


31. பாரமான கல்லைத் தள்ளி வைக்க கம்பி பயன்படுத்தப்படுகின்றது ( )

32. பொலித்தீனை மண்ணுடன் கலப்பதால் எவ்வித தீமையும் உண்டாகாது ( )

33. சுண்ணாம்பு கலந்த நீரைப் பஞ்சினால் வடிக்கும் போது தூய்மையான நீரைப் பெறலாம் ( )

34. பலாமரத்தைத் தறிப்பதற்கு அனுமதிப்பத்திரம் எடுக்க வேண்டும். ( )

இலக்கம் 35 முதல் 39 வரையுள்ள வினாக்களில் பின்வரும் நான்கு உருக்களில், மூன்று உருக்கள் ஏதோ ஒரு வகையில் ஒரே மாதிரியானவை. ஒன்று மட்டும் வித்தியாசமானது. வித்தியாசமான உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

35.


36.



37.



38.


39.


40 முதல் 42 வரையுள்ள வினாக்களின் படங்களில் பிழையான படத்தை தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.


40.


41.


42.


இல 43 முதல் 44 வரை முதலாவதாகத் தரப்பட்டுள்ள படத்துடன் கருத்து நிறைந்த வகையில் தொடர்பு கொண்டிருந்திருக்கும் படத்தை தரப்பட்டுள்ள நான்கு படங்களிலிருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

43.


44.


T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd
ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்






## மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2005

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

★ பின்வரும் தகவலை வாசித்து இல 01- 15 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

மரம் தன்னை நாட்டுவீராயின்,
நாடு அழகு பெறும் மண் வளமுறும்.
மரங்களின் நிழல் குளிர்மை தரும்.
மலர்கள் எம்மை விழிக்கச் செய்யும்.
இனிய பழங்கள் எம்பசி தீர்க்கும்.

★ மேலே கூறப்பட்டதற்கமைய மரங்களால் நாம் பெறும் பயன்கள் இரண்டு தருக.
(1) ..........................................................
(2) ..........................................................

★ பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துள்ள சொல் தருக.
(3) அழகு ..........................................
(4) மலர் ..........................................
(5) பழம் ..........................................
(6) மரம் ..........................................

★ பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துள்ள சொற்களை இந்தப் பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக.
(7) அவலட்சணம் ..........................................
(8) வெயில் ..........................................
(9) வெப்பம் ..........................................
(10) காய்கள் ..........................................

பழங்கள் "எங்கள் பசி தீர்க்கும் என்ற வாக்கியத்தை ஒருமையில் எழுதுக
..........................................................

(11) அழகிற்காக வீட்டினுள் வைக்கப்படும் தாவரங்கள் இரவு வேளைகளில் ஏன் அகற்றப்படுகின்றன?
..........................................................

★ பின்வரும் சொற்களுக்கு இலக்கம் 12 முதல் 15 வரை பொருத்தமான தமிழ்ச் சொற்களை எழுதுக.
(12) மரம் .................... (13) நாடு ....................
(14) மலர் .................... (15) பழங்கள் ....................

★ இல 16 முதல் 21 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்த மான தமிழ்ச் சொற்களைத் தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதுக.
(16) ......... .................... (17) ......... ....................
(18) ......... .................... (19) ......... ....................
(20) ......... .................... (21) ......... ....................

★ பாடசாலை வளவு ஒன்றிலே 15 மாங்கன்றுகள் 10 கொய்யா மரங்கள் 10 வாழைமரங்கள் 5 தென்னைகள் உள்ளன. தாவரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒருமுறை 500 கிராம் பசளை இடப்பட்டால் இல 22 முதல் 26 வரை விடை தருக.

(22) தாவரங்கள் எல்லாவற்றுக்கும் ஒருமுறை இடுவதற்கு எத்தனை கிலோ கிராம் பசளை தேவை?
..........................................................

(23) 1 Kg பசளையின் விலை ரூபா 15.00 எனின், பசளைக்கு செலவிடப்பட்ட தொகை யாது?
..........................................................

(24) சமமான எண்ணிக்கை உடைய மரங்கள் எவை?
..........................................................

(25) மாங்கன்றுகள் -தென்னை மரங்களைப்போல் எத்தனை மடங்கு உள்ளன?
..........................................................

(26) ஒரு தென்னங்கன்றின் விலை ரூபா 120 எனின் தென்னங்கன்றுகள் வாங்க எவ்வளவு பணம் செலவு செய்து இருப்பார்?
..........................................................

★ இல 27 முதல் 29 வரையுள்ள வினாக்களின் பின்வரும் உணவு களை அட்டவணைப்படுத்துக.
கரட், வல்லாரை, பொன்னாங்காணி, பருப்பு, உருளைக் கிழங்கு, தக்காளிப்பழம், அவித்த இறைச்சித் துண்டுகள், சோறு.

| உடற்சக்தியைத் தரும் உணவு | உடல் வளர்ச்சியை மேம்படுத்தும் உணவு | உடலைப் பாதுகாக்கும் உணவு |
|---|---|---|
| (27) .............. | .................. | .................. |
| (28) .............. | .................. | .................. |
| (29) .............. | .................. | .................. |

(30) கீரை வகைகளை சமைக்கு முன் அவற்றை ஏன் உப்புநீரில் கழுவுதல் வேண்டும்.
..........................................................
..........................................................

நாளாந்தம் எவ்வளவுக்கு எவ்வளவு தேநீர் பருகின்றீரோ, அவ்வளவுக்கு அவ்வளவு உமது தேகம் ஆரோக்கியம் பெறும் என்பது ஓர் அறிவுறுத்தலாகும்.
இலங்கையில் தேயிலை விளையும் பிரதேசங்கள் இரண்டை எழுதுக.
(31) ........................ (32) ........................

தேயிலை வளரும் பிரதேசங்களில் தமிழர் தமது சமய வழிபாட்டுக்காகப் பயன்படுத்தும் இசைக் கருவிகள் இரண்டை எழுதுக.
(33) ........................ (34) ........................

(35) இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் எங்கே அமைந்துள்ளது?
..........................................................

(36) இலங்கையின் தேயிலையை அறிமுகம் செய்த நாட்டவர் யார்?
..........................................................

(37) இலங்கையிலிருந்து தேயிலை வாங்கும் ஒரு நாட்டின் பெயரை எழுதுக?
..........................................................

தேயிலையின் சாயத்துக்கு அதிக அளவு சீனியைச் சேர்ப்பதால் உங்களது பற்களுக்கு ஏற்படக்கூடிய பற்சேதங்கள் மூன்றை எழுதுக.

(38) ......................................

(39) ......................................

(40) ......................................

★ மண்ணரிப்பைத் தடை செய்வதற்கு தேயிலைப் பெருந் தோட்டங்களில் கையாளும் இரு முறைகளை எழுதுக.

(41) ......................................

(42) ......................................

(43) ஒரு கப் தேநீர் பருகினேன். இவ்வாக்கியத்தின் எழுவாய் எது? ......................................

(44) 5 Kg தேயிலையை, ஒவ்வொன்றும் 200 g கொண்டதான எத்தனை பைக்கற்றுக்களைத் தயாரிக்கலாம்?

......................................

(45) 1 Kg தேயிலையின் விலை 140.00 எனின், 200 g தேயிலையின் விலை யாது?

ரூபா ...................... சதம் ......................

★ இல. 46 முதல் 50 வரை அடைப்புக்குள் தரப்பட்டிருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடங்களை நிரப்புக.

( is, Eight, Two, yes, are, you)

(46) Would ...................... like a cup of tea?

(47) ...................... please.

(48) How much ...................... a cup of tea?

(49) ...................... rupees.

★ பின்வரும் தகவலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு இல. 50 முதல் 65 வரை விடைதருக.

ஓரிரு ஆண்டுகள் கழிந்ததன் பின்னர் கிராமம் அதிட்டம் குறைந்த காலத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. மழை உரிய காலத்தில் பெய்யவில்லை. வறட்சி மெல்லமெல்ல மோசமான நிலையை அடைந்தது. கிராமத்தினூடாகப் பாய்ந்து சென்ற ஆறும் வற்றியது. நாட்கள் போக கிராம வாசிகளுக்குக் குடிப்பதற்குத்தானும் ஒரு துழி நீரும் கிடைக்கவில்லை. காட்டு மரம், செடி, கொடிகள் யாவும் கருகிப் போயின. மிருகங்கள் தமக்குச் சௌகரியமான இடங்களை நோக்கிச் சென்றன. இதனால் மனிதர் தமது உணவையும் பெற்றுக்கொள்ள முடியாது தவித்தனர். மூத்த கிராம வாசிகள் தமது சொந்த இடங்கலை விட்டு விட்டுத் தாமும் போக நேரடிமோ என்று அஞ்சி அஞ்சிக் காலம் கழித்தனர்.

பந்தியில் பிழையாக எழுதப்பட்ட நான்கு சொற்களையும் இனங்கண்டு எழுதுக.

(50) ......................................

(51) ......................................

(52) ......................................

(53) ......................................

★ பந்தியிலுள்ள அடுக்கு மொழிகள் இரண்டு உள்ளன. அவற்றை இனங்கண்டு எழுதுக.

(54) ......................................

(55) ......................................

★ பந்தியிலுள்ள பெயர் அடைமொழிகள் இரண்டைத் தருக

(56) ......................................

(57) ......................................

★ பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துள்ள சொல் தருக

(58) ஆண்டு ......................................

(59) நாள் ......................................

★ பின்வரும் கருத்தைத் தரும் தனிச் சொல்லை எழுதுக.

(60) மழை பெய்யாத காலம் ......................................

(61) உணவு கிடைத்தல் மிக அரிதாயுள்ள காலம்

......................................

★ பின்வரும் சொற்களை ஒருமையில் எழுதுக.

(62) ஆண்டுகள் ......................................

(63) நாட்கள் ......................................

(64) இடங்கள் ......................................

(65) கிராம வாசிகள் ......................................

★ பின்வரும் வாக்கியங்களை தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக.

உரிய காலத்தில் மழை பெய்யவில்லை
நாளுக்கு நாள் வறட்சி மிகுந்து வந்தது.
கிராமத்தினூடாகப் பாய்ந்து ஆறு வற்றியது

......................................

......................................

இல, 66 முதல் 72 வரை 'காட்டில் வளரும் தாவரங்கள் நாம்' என்னும் தலைப்பில் ஏழு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது பொருத்தமான எழுவாய், பயனிலையுடன் இருத்தல் வேண்டும்.

(67) ......................................

(68) ......................................

(69) ......................................

(70) ......................................

(71) ......................................

(72) ......................................



# வினாத்தாள் 2

★ இல 01 முதல் 05 வரையுள்ள வினாக்களுக்கு படத்தைப் பார்த்து விடை தருக.



1. இந்தப் படத்தில் உள்ளவரை எவ்வாறு அழைப்பர்? ......................................
2. இவர் என்ன தொழில் செய்கின்றார்? ......................................
3. இவர் செய்யும் தொழிலுக்கு என்ன பொருட்கள் தேவை? ......................................
4. இந்தப் பாத்திரங்களை எதற்கு உபயோகிக்கின்றனர்? ......................................
5. பின்வரும் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.
   1. மக்கள் ......................................
   2. தொழில் ......................................

★ இல 06. முதல் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள உருவங்களுடன் மிக நெருங்கிய தொடர்பை உடைய சொற்கள் அடங்கிய விடையின் கீழே கோடிடுக.

6.



1. பறவைகள், வியாபாரிகள், மருந்து
2. மரப்பலகை, மருந்து, உணவு
3. விலங்கு, நிழல், மரப்பலகை .

7.



1. வியாபாரி, அதிபர், பெற்றோர்
2. கடதாசி, தொழிற்சாலைகள், விளையாட்டு
3. கற்றல், மாணவர், ஆசிரியர்

8.



1. காடு, சோறு, திரியும்
2. பழம், பறவை, கூடு
3. கத்தும், இறைச்சி, புற்று

9.



1. வீடு, மாமிசஉண்ணி, பேசும்
2. கொம்பு, தாவர உண்ணி, கறுப்பு
3. கிளையுள்ள கொம்பு, ஆட்டினம், தாவரஉண்ணி

10



1. பாடசாலை, அதிபர், ஆசிரியர்
2. விளையாட்டு, உடல்வலு, மாணவர்
3. படிப்பு, பாடம், விளையாட்டு

★ இல 14 முதல் எழுத்துக்களின் தொடர்களையும், எண்களின் தொடரையும் அவதானித்து கீழே தரப்பட்ட அறிவுறுத்தல்களை வாசித்து அதன்படி செய்க.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3, | 8, | 4, | 9, | 3, | 4, | 5, | 8, | 5, | 4, | 7, | 6, | 2 |
| A, | N, | E, | G, | F, | E, | H, | C, | k, | Q, | R, | I, | K |
| ம, | க, | ல, | சி, | ப, | க, | ங், | ப, | ய | | | | |

11. தமிழ் எழுத்தில் இருந்து ஒரு மிருகத்தின் பெயர் எழுதுக. ......................................
12. தமிழ் எழுத்தில் இருந்து ஒரு பெண்ணின் பெயர் எழுதுக. ......................................
13. காற்றாடி ஒன்றில் ஆங்கிலச் சொல்லுக்குரிய மூன்று எழுத்துக்களைக் கொண்ட ஆங்கில எழுத்துக்களைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக. ......................................
14. அடுத்து வரும் மூன்று எண்களின் கூட்டுத் தொகை 16 வரும்படி அந்த மூன்று எண்ணையும் வட்டமிடுக. ......................................
15. G என்ற எழுத்தை மூன்றாவதாக வரும் 4 எண்ணையும் இணைக்குக. ......................................
16. இதில் வரும் முக்கோண எண்களை எழுதுக. ......................................
17. முதல் நான்கு எண்களையும் பெறுமானம் கூடிய முறையில் எழுதுக. ......................................
18. ஒரு வாகனத்தின் பெயர் வரக்கூடிய ஆங்கில எழுத்தின் கீழ் கோடிடுக. ......................................
19. இடமிருந்து ஐந்தாவதாக உள்ள இலக்கத்தையும், வலமிருந்து நான்காவதாக உள்ள இலக்கத்தையும் கூட்ட வரும் எண்ணுக்குச் 'சமமாக உள்ள இலக்கத்தைச் சுற்றி சதுரமிடுக. ......................................
20. இதில் உள்ள ஆங்கில எழுத்துக்களை அகரவரிசைப்படி எழுதுக. ......................................

# படைப்பாளிகள், கலைஞர்களை உருவாக்குவதில் திருமறைக் கலாமன்றம் முன்னின்று செயற்படுகிறது

## அருட்தந்தை மரியசேவியர் தெரிவிப்பு



(சில்லாலை)

சிறந்த கலைஞர்களையும், படைப்பாளிகளையும் உருவாக்குவதில் திருமறைக் கலாமன்றம் திறம்படச் செயற்படுகிறது என திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநர் அருட்தந்தை மரியசேவியர் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தில் திருமறைக் கலாமன்றத்தின் கிளை அலுவலகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

சில்லாலை கதிரைமாதா ஆலயப் பங்குத்தந்தை அன்ரனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை மரியசேவியர், கலாபூஷணம் ஜி.பேர்மினஸ், நிர்வாக உத்தியோகத்தர் ஜெகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய திருமறைக் கலாமன்ற இயக்குநர் -

திருமறைக் கலாமன்றம் இதுவரை பல்வேறு இடங்களில் பல கிளைகளை ஆரம்பித்து, திறம்படச் செயலாற்றிப் பல கலைஞர்களை உருவாக்கியுள்ளது.

முன்னர் கத்தோலிக்க திருச்சபை அழிவை நோக்கியிருந்த ஒரு கட்டத்தில் சில்லாலை, கத்தோலிக்க சமயத்தைக் கட்டிக்காப்பதற்கு முக்கிய பங்கு வகித்திருந்தது. அதேபோல் இங்கு பல கலைஞர்கள் உருவாகியுள்ளார்கள்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர், சிறுமிகளுக்கும் - இளைஞர் யுவதிகளுக்கும் யாழ். திருமறைக் கலாமன்ற கவின்கலை இணைப்பாளர் கலாபூஷணம் ஜி.பேர்மினஸ் பயிற்சிப் பாசறை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

# யு.என்.எச்.சி.ஆர். உதவியுடன் தற்காலிக வீடுகள் அமைப்பு!

கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், யுத்தத்தில் இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்து வருவோருக்கும் யு.என்.எச்.சி.ஆர்.நிறுவனத்தால் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

70 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தத் தற்காலிக வீடுகளை அமைத்து வரும் இந்த நிறுவனத்தினர் - இதுவரை மணற்காட்டில் 210 வீடுகளையும், புனித நகர் பகுதியில் 109 வீடுகளையும், கற்கோவளம் பகுதியில் 66 வீடுகளையும் அமைத்துக்கொடுத்துள்ளனர்.

அடுத்த கட்டமாக புனிதநகர் பகுதியில் 30 வீடுகளும், கற்கோவளம் பகுதியில் 25 வீடுகளும், முனைப் பகுதியில் 30 வீடுகளையும் அமைக்கவுள்ளனர்.

இவைதவிர கடந்தகால யுத்தத்தால் இடம்பெயர்ந்து, தற்போது மீளக்குடியமர்ந்துவருபவர்களுக்கும் இந்த வீடமைப்பை வழங்கவுள்ளனர்.

சங்கானை - பாண்டுவெட்டைப் பகுதியில் 60 வீடுகளையும், பொன்னாலைப் பகுதியில் 33 வீடுகளையும், மண்டைதீவுப் பகுதியில் 55 வீடுகளையும் அமைக்கவுள்ளதாகவும் - இந்த வீடுகள் அமைக்கும்பணி இரண்டு வாரத்துக்குள் ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (20)

# பாடசாலை கொட்டகைகள் அமைக்கும் பணி மந்தகதியில்

(ஆழியவளை)

சுனாமி அனர்த்தத்தால் பாதிப்படைந்த பாடசாலைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைக்கும் பணிகள் மந்த நிலையில் நடைபெற்றுவருவதாக அதிபர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

மழை தொடங்குவதற்கு முன்னர் இந்தக் கொட்டகைகளை அமைத்துத் தரவேண்டுமென பாதிக்கப்பட்ட பாடசாலையின் அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுனாமி அனர்த்தம் காரணமாக வடமராட்சி கல்வி வலயத்தில் 10 பாடசாலைகள் முற்றாகச் சேதமடைந்திருந்தன. இந்தப் பாடசாலைகள் தற்போது பல்வேறு சிரமத்தின் மத்தியில் மர ழல்களிலேயே இயங்கிவருகின்றன.

வல்வை சிவகுரு வித்தியாலயம், மணற்காடு றோ.க.த.க.பாடசாலை, பொற்பதி றோ.க.த.க.பாடசாலை, மாமுனை அ.த.க.பாடசாலை, செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை, தாளையடி றோ.க.த.க.பாடசாலை, ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், வெற்றிலைக்கேணி றோ.க.த.க.பாடசாலை, கட்டைக்காடு றோ.க.த.க.பாடசாலை என்பவையே மர நிழல்களின் கீழ் இயங்கிவருகின்றன.

எனவே, இந்தப் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை உணர்ந்து, சம்பந்தப்பட்டவர்கள் கட்டடப் புனரமைப்புப் பணிகளை துரிதப்படுத்தவேண்டுமென சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (122)

# உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

வலிகாமம் வலயத்தில் அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அழகியற் கல்வித்துறையில் ஆகக்குறைந்தது ஆசிரியர் பயிற்சியை முடித்த இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2 : 1, வகுப்பு 2:11 ஐச் சேர்ந்த பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலய அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வேறு வலயத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க விரும்பின் தமது வலயக் கல்விப் பணிப்பாளரூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

# நீரில் மூழ்கியதில் 2 பெண்கள் பலி

குளித்துக் கொண்டிருந்தவேளை வலிப்பு நோய் ஏற்பட்டதையடுத்து நீரில் தவறி வீழ்ந்ததால் இரு பெண்கள் உயிரிழந்தனர்.

முதலாவது சம்பவத்தில் - சரசாலை தெற்கைச் சேர்ந்த சபாரத்தினம் பத்மாவதி (வயது 24) என்ற பெண்ணே உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு குளத்தில் குளிக்கச்சென்ற இவர் வலிப்பு நோயால் குளத்தில் தவறி வீழ்ந்து உயிரிழந்ததாகத் தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை - உடுப்பிட்டியில் இளம்பெண் ஒருவர் வலிப்பு நோயால் கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமானார். அமிர்தலிங்கம் நர்மதா (வயது 19) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை குளிப்பதற்காக கிணற்றடிக்குச் சென்றபோதே கிணற்றில் தவறிவீழ்ந்து இவர் மரணமானார். இவரது சடலம் மருத்துவ பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளின் பின் நேற்று முன்தினம் மாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (24)

# குடாநாட்டு உற்பத்திப் பொருட்களை கொழும்புக்கு அனுப்புவதே முதல் பணி

## விவசாய சந்தைப்படுத்தல் இணைப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் விவசாய உற்பத்திப் பொருட்களை கொழும்புக்கு ஏற்றுமதி செய்து, விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என - யாழ். மாவட்ட விவசாய சந்தைப்படுத்தல் கூட்டுறவு அபிவிருத்தி இந்து அலுவல்கள் மற்றும் பாடசாலைகள் தொழிற் பயிற்சி அமைச்சின் யாழ். மாவட்ட இணைப்பாளர் கே.நாகராஜா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் தனது கடமையைப் பொறுப்பேற்ற பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது ஆரம்ப கட்டப் பணிகளை யாழ். செயலக இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்தார்.

யாழ். குடாநாட்டில் சிறு கைத்தொழில் மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களை அவர்கள் பயனடையக்கூடிய விதத்தில் கொழும்புக்கு ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கையை முதற்கட்டமாக ஆரம்பிக்கவுள்ளேன். அத்துடன், குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் தொழிற்பயிற்சி நிறுவனங்களை ஆரம்பித்து வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்க ஏற்பாடு செய்வதுடன் - தகவல் தொழில்நுட்பத்தை விஸ்தரிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார். தற்போது யாழ். மாவட்ட இணைப்பாளராகப் பொறுப்பேற்று இருக்கும் கே.நாகராஜா மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் என்பதும் குறிப் பிடத்தக்கது.

### உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன

தமிழ்நாட்டிலிருந்து மீளத்திரும்பிய யாழ்.பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 33 குடும்பங்களுக்கு யூ.என்.எச்.சி.ஆர்.நிறுவனத்தால் உணவுப் பொருட்கள் அல்லாத பொருட்கள் யாழ்.பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : ஜெ.டிலச்சிகா
முகவரி : குப்பிளான்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி
பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

# பருத்தித்துறை கல்விக் கோட்டத்தில் 31 பாடசாலைகளுக்கு சத்துணவு

(ஆழியவளை)

பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட 31 பாடசாலைகளில் இரண்டாம் தவணை முதல் உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.

தரம் 1 தொடக்கம், தரம் 9 வரையான மாணவர்களுக்கே இவை வழங்கப்படுகின்றன.

இதேவேளை, மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் சகல பாடசாலைகளையும் சேர்ந்த தரம் 1 தொடக்கம், தரம் 5 வரையான ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு இரண்டு மாதத்துக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்களை வேல்ட் விசன் நிறுவனத்தினர் பெற்றோர்களிடம் கையளித்தனர்

(122)

# திருட்டு மின் பெற்றோர் நீதிமன்றத்தில் ஆஜர்!

மின்சார சபையின் வடமராட்சி உதவி மின் பொறியியலாளர் குழுவினர் வல்வெட்டித்துறை பொலிஸாரின் உதவியுடன் இந்தப்பகுதியில் நடத்திய சோதனையின்போது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுவந்த 12 பேரைக் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

நீண்டகாலமாக பொதுமக்கள் கொடுத்த முறைப்பாடுகளையடுத்தே கடந்த வெள்ளிக்கிழமை மின்சார சபையால் இந்தத் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டவிரோதமாக மின்சாரம்பெற்றதாக வல்வெட்டித்துறையில் ஒருவரும், மருதடிச் சந்தியில் மூவரும், இலகடி உடுப்பிட்டியில் மூவரும், காட்டுப்புலம் தொண்டைமானாறுப் பகுதியில் ஒருவரும், தொண்டைமானாறு மத்தியில் நால்வரும் கண்டுபிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். (13)

# வீடுகள் கையளிப்பு!

நிகொட் நிதியுதவியுடன் யாழ். மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் - சாவகச்சேரி பிரதேசத்திலும், நாவாந்துறை, கொட்டடி, சூரியவெளி, வில்லூன்றி ஆகிய இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத்திட்டத்தில் வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொண்டு வீடுகளைக் கையளிக்கவுள்ளார். சாவகச்சேரிப் பிரதேசத்தில் 121 வீடுகளும், நாவாந்துறை, கொட்டடி, சூரியவெளி, வில்லூன்றிப் பகுதிகளில் 122 வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

## சுனாமியால் அழிவடைந்த

# பாடசாலை கட்டடங்களை அமைப்பதில் இடையூறுகள்

(ஆழியவளை)

சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புற்ற பாடசாலைகளுக்குப் புதிய நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கும் பணிகளை ஆரம்பிப்பதில் பல்வேறு இடையூறுகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய நிரந்தரக் கட்டடங்கள் கடற்கரைக்குச் சற்றுத் தொலைவில் அமைக்கப்பட வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாடசாலைக்கான காணியைத் தெரிவு செய்வதில் உதவி அரச அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள், பாடசாலைச் சமூகத்தினர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஏற்கனவே பாடசாலைகள் அமைந்திருந்த அதே இடத்திலேயே புதிய பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் நிலவிவருகிறது. எது எப்படி இருந்தபோதும் - பாடசாலை அமைப்பதற்கான புதிய காணிகளைத் தெரிவுசெய்து உறுதிப்படுத்தப்படும் பட்சத்திலேயே புதிய நிரந்தரக் கட்டடங்கள் விரைவில் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (122)

### வருடாந்த மஹோற்சவம்

யாழ்.வண்ணை கோட்டையம்பதி அருள்மிகு சிவசுப்பிரமணியர் (தாமரை வீதி) தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும், 23 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் மறுநாள் 24 ஆம் திகதி இரவு 7 மணிக்கு பூங்காவனமும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (206)

# கடற்தொழில் உபகரணங்கள் இன்மையால் தொழிலில் ஈடுபட முடியாத நிலையில் மீனவர்கள்!

## கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(வடமராட்சி கிழக்கு)

யாழ். மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் வட மராட்சி கிழக்குப் பிரதேசமே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களால் எந்தவொரு கடற்தொழில் உபகரணங்களும் இதுவரையில் வழங்கப்படவில்லை என, கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்தார்.

கியூமெடிக்கா நிறுவனத்தால் கடந்த வெள்ளிக்கிழமை படகுத் தொகுதிகள், படகு இயந்திரவலைகள் போன்றன இலவசமாக வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தப் பிரதேசத்தில் பல கோடிக் கணக்கான பெறுமதியுள்ள கடற்தொழில் உபகரணங்கள் அழிக்கப்பட்டுள்ளன, சுனாமி ஏற்பட்டு ஐந்து மாதம் முடிவடைந்தும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கடற்தொழில் உபகரணங்களை வழங்காததால், சேதமடைந்த படகுகள். இயந்திரங்கள் வலைகளைத் திருத்தியே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கடற்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு இலவசமாக கடற்தொழில் உபகரணங்களை வழங்குவதால், இந்தப் பிரதேச மக்களில் ஒரு பகுதியினர் முழு நேரத் தொழிலில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுமார் 900 படகுத் தொகுதிகளை வழங்குவதற்கு 10 இற்கும் மேற்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒப்புதல் அளித்தபோதும், கியூமெடிக்கா நிறுவனம் தவிர வேறு எந்த நிறுவனமும் உதவிகளை வழங்கவில்லை. இலங்கையில் படகுகளை உற்பத்தி செய்வதில் தாமதம். வெளியிணைப்பு இயந்திரங்கள். வலைகள் மற்றும் கடற்தொழில் உபகரணங்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதில் தாமதம் ஆகியவற்றால், அரச சார்பற்ற நிறுவனங்கள் படகுத் தொகுதிகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட ஒரு தொகுதி படகுகள் மூலம் ஒரு பகுதி கடற்தொழிலாளர்கள் கடலுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவற்றை விட இன்னும் படகுத் தொகுதிகளை கூடுதலாக வழங்குவதன் மூலம், அனைவரும் கடற்தொழிலுக்குச் செல்லக் கூடியதாகவிருக்கும். கியூமெடிக்கா நிறுவனம் தர ஒப்புக் கொண்ட 300 படகுகளையும் மிக விரைவில் இந்தப்பிரதேச மக்களுக்கு வழங்கவேண்டும். சொல்வதை விட செயலில் காட்டுவதே மேலானது. அதையே கியூமெடிக்கா இலங்கை நிறுவனம் இன்று செய்துள்ளது எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு -வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க பணிமனையில் சமாசத் தலைவர் மு.தங்கவேலு தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை கியூமெடிக்கா யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் வண. பிதா சாம் இராசசூரிய, தாளையடி கடற் தொழில் பரிசோதகர் ந.கணேச மூர்த்தி, கியூமெடிக்கா நியூசிலாந்து, பெரிய பிரித்தானியா பிரதிநிதிகள் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் வடமராட்சி கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவன் ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையை சமாசச் செயலாளர் கொ.அ. ஸ்ரனிஸ்லாஸ் நிகழ்த்தினார்.

சிறப்புரையை கியூமெடிக்கா யாழ்ப்பாணத் திட்டமிடல் பணிப்பாளர் வண. பிதா சாம் இராசசூரிய, கியூமெடிக்கா நியூசிலாந்துப் பிரதிநிதி, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் க.ஈஸ்வரபாதம், வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச மேலாளர் து.குகன், யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் க. சூரியகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் 9 சங்கங்களுக்கும், 31 படகுத் தொகுதிகள் வழங்கப்பட்டன. அவை சுண்டிக்குளம், தாளையடி, செம்பியன்பற்று சங்கங்களுக்கு தலா 2 படகுகளும் - மருதங்கேணி, மாமுனை சங்கங்களுக்கு தலா 3 படகுகளும் - கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி சங்கங்களுக்கு தலா 4படகுகளும் - ஆழியவளைக்கு 5 படகுகளும் - உடுத்துறைச் சங்கத்துக்கு 6 படகுகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

(21)

# தமிழீழ சட்டக் கல்லூரியில் நாளை பட்டமளிப்பு விழா!

(கிளிநொச்சி)

தமிழீழச்சட்டக் கல்லூரியின் ஐந்தாவது பட்டமளிப்பு விழா நாளை நடைபெறவுள்ளது.

இந்தச் சட்டக் கல்லூரி 1992 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில்போராளிகளை மட்டும் உள்வாங்கிய இந்தக் கல்லூரி தற்போது தகுதியான அனைவரும் கற்கக்கூடிய நிலையை உருவாக்கியுள்ளது.

1995 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின்போது இடம் பெயர்ந்து முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் இயங்கி வந்தது.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சியில் புதிய கட்டடத்தில் இயங்கிவருகிறது.

இந்தச் சட்டக் கல்லூரி ஆரம்பித்த நாள் முதல் இதுவரை நான்கு அணியினர் கற்கை நெறியை முடித்து வெளியேறியுள்ளனர். வெளியேறியவர்களில் போராளிகளும் அடங்குவர்.

உள்வாரி அணியினரும், முதலாவது வெளிவாரி அணியினருக்குமான ஐந்தாவது பட்டமளிப்பு விழா இதுவாகும்.

இந்தக் கல்லூரியில் வெளிவாரியாக 90 மாணவர்கள் கற்கை நெறியை பயில்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# வீடு தீக்கிரை

கிளிநொச்சி செல்வா நகரிலுள்ள புகைப்படப் பிடிப்பாளர் ஒருவரின் வீடு - திடீரெனத் தீப்பற்றியதில் சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுதா புகைப்பட நிலைய உரிமையாளரான பாக்கியராஜ் ஸ்ரீதர் என்பவரின் வீடே தீப்பிடித்து எரிந்தது.

சம்பவம் பற்றி வீட்டிலிருந்த அவரது தாயார் கருத்துத் தெரிவிக்கையில் -

நாய் குரைத்து சிறிது நேரத்தில் வீடு திடீரெனத் தீப்பற்றி எரியத் தொடங்கியது எனவும், தொழிலின் போட்டி காரணமாக வீட்டுக்கு யாராவது தீவைத்திருக்கலாம் என அவர் தெரிவித்தார்.



போராலும், சுனாமி அனர்த்தத்தாலும் பாதிக்கப்பட்டு அங்கவீன முற்ற மக்களுக்கென, ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த மனிதநேய அமைப்பி னரால் கிளிநொச்சி நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்திடம்கையளிக்கப்பட்ட ஒரு தொகுதி துணைக்கருவிகளை முதலாவது படத்திலும், ஜேர்மன் நாட்டவரான அறிவ் அஹ்மீட் நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத் தலைவர் ரட்ணத்திடம் அவற்றைக் கையளிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்:-

படம் -கடம்பேஸ்

# திறப்பு விழா

(பரந்தன்)

பரந்தன் -உமையாள்புரம் கலையரசி ஞாபகார்த்தமான முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழா -இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் மற்றும் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். கலையரசியின் மாமனார் சு. செல்வகுமார் இந்தக் கட்டடத்தை கலையரசி ஞாபகார்த்தமாக அன்பளிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# அறங்காவல் குழு தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வரலாற்றுப் பெருமைமிக்க சிவாலயமான உருத்திரபுரீச்சர பெருங் கோயிலின் திருப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக சகல பிராந்தியங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அறங்காவல் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தடைப்பட்டுள்ள திருப்பணிகள் முன்னெடுக்கும் வகையில் பல திட்டங்கள் இந்த அறங்காவல் குழுவால் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மருதங்கேணி பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது!

(ஆழியவளை)

மருதங்கேணி கல்விக்கோட்டப் பாடசாலைகளில் விசேட பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக, மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகப் பாடசாலை சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

குறிப்பாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சங்கீதம் போன்ற விசேட பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் போதுமானளவு இல்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் இந்தப் பாடங்கள் போதிக்கப்படுவதில்லை எனப் பெற்றோர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். (122)

# இடமாற்றம்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செயலகம், தற்காலிகமாக பேராற்றின் தாமரை செங்கல் உற்பத்தி நிலையக் கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## மே 18

1830 :- குளௌவ் செஸ்ட்சையரைச் சேர்ந்த எட்வின் பட்டிங் என்பவர் தான் கண்டுபிடித்த புல் வெட்டும் இயந்திரத்தைத் தயாரிப்பதற்கு போனிக்ஸ் அயன் வேர்க்ஸ் என்ற கம்பனியுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

1917 :-ஒஸ்திரியா - ஜேர்மன் நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தப்படி ஒஸ்திரியாவுக்கு பால்கன் பகுதிகள் கிடைத்ததுடன், போலந்துடன் பால்டிக் பகுதியில் வெற்றி பெறும் இடங்களை ஜேர்மனி பெற்றுக் கொள்ளவும் முடிவு காணப்பட்டது.

✦ :-அமெரிக்காவில் 21 முதல் 31 வயது வரையுள்ள ஆண்கள் கட்டாயமாக இராணுவப் பணிபுரிய வேண்டும் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது.

✦ :- அமெரிக்க மருத்துவமனைக் கப்பல் 240 பணியாளர்களுடன் பிரிட்டன் போய்ச் சேர்ந்தது.

1918 :-ஜேர்மனியின் கொலேகன் நகரின் மீது முதன்முறையாக பிரிட்டிஷ் விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதில், ஏராளமான கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன. நூற்றுக்கணக்கானவர்கள் இறந்து போயினர்.

1926 :-உலக ஆயுதக் குறைப்பு மாநாட்டுக்காக அமைக்கப்பட்ட பூர்வாங்கக் குழுவின் முதல் கூட்டம் ஜெனிவாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளும் கலந்துகொண்டன. ரஷ்யா கலந்துகொள்ளவில்லை.

1953 :-அமெரிக்காவில் ஜாயூலின் கோக்ரென் என்ற பெண் விமானி முதன் முதல் ஒலியை விஞ்சும் வேகத்தில் விமானத்தை ஓட்டிக் காண்பித்தார்.

1955 :-இந்துக்கள் திருமணச் சட்டம் இந்தியாவில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தியாவில் மதச் சடங்காகக் கருதப்படும் திருமணத்துக்கு சட்ட பூர்வமாகப் பாதுகாப்பளிக்க இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

1956 :-அல்ஜீரியாவில் இருந்த பிரெஞ்சுப்படை அல்ஜீரியர்களால் முழுமையாக அழிக்கப்பட்டது.

1963 :-இந்தோனேசிய சட்ட சபைக்கு ஜனாதிபதி சுகர்னோவால் நியமிக்கப்பட்ட 600 உறுப்பினர்களும் சட்டசபையில் கூடி, இந்தோனேசியாவுக்கு ஜனாதிபதி சுகர்னோவே ஆயுள்காலம்வரை ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர்.

1967 :-எகிப்திய அதிபர் நாஸர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சினாய் பகுதியில் இருந்து ஐ.நா. அமைதி காக்கும் படை வெளியேறியது.

1969 :-அப்பல்லோ - 10 என்ற விண்கலம் அமெரிக்காவால் விண்ணில் செலுத்தப்பட்டது. இது நிலவை 31 தடவைகள் சுற்றிவந்தது.

1974 :-இந்தியா- ராஜஸ்தானில் பொக்ரான் பாலைவனத்தில் தனது முதலாவது அணுகுண்டு சோதனையை வெற்றிகரமாக செய்து முடித்தது. இதன் மூலம் இந்தியா அணு ஆயுதத் திறன் உடைய ஆறாவது நாடாகியது.

1980 :-அமெரிக்காவின் வொஷிங்டன் மாநிலத்திலுள்ள செயிண்ட் ஹெலண்ஸ் என்னும் எரிமலை, எரிமலைக் குழம்பைக் கக்கத் தொடங்கியது. இதனது தாக்கம் (விசை) ஹிரோசிமாவில் போடப்பட்ட அணுகுண்டைப்போல 500 அணுகுண்டுகளுக்குச் சமமாக இருந்ததுடன், இதிலிருந்து எழுந்த ஓசை (ஒலி) 320 கிலோ மீற்றர் தூரம்வரை கேட்டது. 40 கோடி தொன் எரிமலைக் குழம்பு வீசி எறியப்பட்டது. வானில் 4000 கிலோமீற்றர் நீளமும், 1600 கிலோ மீற்றர் அகலமும் கொண்ட சாம்பல் மேகம் உருவாகி, பல நகரங்களை இருளாக்கின. இந்த எரிமலையின் சீற்றம் தணிந்த பின், மலையின் உயரம் 400 மீற்றர் குறைந்து விட்டது.

2001 :-சீனப் பிரதமர் சூ ரொம் ஜி இலங்கைக்கு வருகை தந்தார்.

✦ உலக நூதனசாலை தினம்

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
*கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## காது குளிர்ந்தால் மட்டும் போதுமா?

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஆரம்பமான தினத் தன்று ஜனாதிபதி சந்திரிகா - அரசாங்கத் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தனது கூட்டணிக் கட்சிகளை விளாசித் தள்ளியி ருக்கிறார்.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக் கட்ட மைப்பை உருவாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் - ஜனாதிபதி சந்திரிகா வையும் அவரது அரசாங்கத்தையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு கட்டத்தில்தான் - இந்தப் பேட்டி வெளியாகியிருக்கிறது.

பொதுக் கட்டமைப்பு உடன்பாட்டுக்கு அரசாங்கம் செல் வதை புலிகளிடம் ஏதோ நாட்டை ஒப்படைக்கப் போவது போன்று கூச்சலிடும் சிங்கள தீவிரவாத சக்திகளிடம் இருந்து தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

மேற்படி தீவிரவாத சக்திகளுடன் இணைந்து ஆட் சியை அமைத்த ஜனாதிபதி சந்திரிகா - அவர்களின் சுய ரூபத்தை நன்கு அறிந்துகொண்ட பின்னர்தான் இப்படிக் கூறியிருந்தால் அது தென்னிலங்கை அரசியலில் மாற்றங் களுக்கு வழிவிடும்.

இதுவரை காலமும் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றும் - தன்னைக் கொலை செய்ய முற்பட்டவர்கள் என்றும் ஜனாதிபதி சந்திரிகா கூறிவந்த நிலை மாறி -

அதே குற்றச் சாட்டுக்களை இப்போது ஜே.வி.பியின் பக்கத்துக்குத் திருப்பியிருக்கிறார். தனது கணவரைக் கொன்றவர்கள் என்றும் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத் தினால் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடியவர்கள் என்றும் தனது கூட்டணிக் கட்சியை விமர்சிக்கும் அளவுக்கு, சந் திரிகாவுக்கு கூட்டணி அரசைக் கொண்டு செல்வதில் விரக்தி ஏற்பட்டிருப்பதையே உணர்த்துகிறது.

அத்துடன் கடந்த மூன்று வருடகால யுத்த நிறுத்த காலத்தில் புலிகளின் நடவடிக்கைகள் திருப்தி தருவது போன்றும் கருத்துத் தெரிவித்திருக்கும் சந்திரிகா - புலிகள் ஒரேயடியாக ஜனநாயகத்துக்குத் திரும்பவேண்டும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம் என்றும் கூறியிருக்கிறார்.

இப்படிப் பல யதார்த்த பூர்வமான கருத்துக்களை நம்பமுடியாத வகையில் வெளியிட்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா - தமிழ் மக்கள் நம்பத்தக்க வகையில் ஆட்சி யாளர்கள் நடந்துகொள்ளவில்லை என்ற உண்மை யையும் தெரிவித்துள்ளார்.

புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு ஏற்படுவதை எதிர்க் கும் ஜே.வி.பியினரைப் போன்று புலிகள் அழிவுகளைச் செய்யவில்லை என்று அவர்களைத் 'தலையில் குட்டி' விட்டு -

பொதுக் கட்டமைப்பை எதிர்ப்பவர்கள் முதலில் தமது பிள்ளைகளுடன் இணைந்து சண்டைக்குச் செல்லத் தயாரா என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

இன்று பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதென்பது அனைவருக்கும் அவசியமானதொன்றாக முக்கியம் பெற் றுள்ள நிலையில் இதற்குக் குறுக்கே நிற்பவர்களைத் தனது கூட்டாளிகள் என்றும் பாராமல் சந்திரிகா விமர்சித்திருப்பது பலருக்கும் வியப்பைத்தான் தோற்றுவித்துள்ளது.


சில யதார்த்த பூர்வமான கருத்துக்களை ஜனாதிபதி சந்திரிகா வெளிப்படுத்தியிருந்தாலும் - அவர் எந்த அளவுக்கு இதை நடைமுறைப்படுத்துவார் என்ற மிகப்பெரிய கேள் விக்கு இப்போது பதில் கூறிவிட முடியாது.

இதற்கு முன்னரும் பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக பலமுறை பேசிவிட்டபோதும் - அவற்றை நடைமுறைப் படுத்துவது இதுவரை சந்திரிகா எந்த முன்னேற்றத்தையும் காட்டவில்லை.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் ஆங்கில வாரஇதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப் பிட்டதைப் போன்று எல்லாவற்றையும் சந்திரிகா பேசுகி றாரே தவிர ஒன்றையும் செயற்படுத்தக் காண முடிய வில்லை.

இனிமேலும் அவர் மாற்றம் பெறுவாரா? என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. ஜே.வி.பி, ஹெல உறுமயவை எதிர்த்துக்கொண்டு துணிந்து அவர் செயற்படத் தொடங் கினால்தான் - இவரது பேச்சின் இனிமையைக் காது குளிரக் கேட்க முடியும்.

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# அம்மையாரின் துணிச்சலும் அடுத்து நடக்கப்போவதும்!

கொலை செய்யக் கூடியவர்களும், குழப்பம் செய்யக் கூடிய வர்களும் இலங்கையில் எங்கே இருக்கிறார்களென்பதைக் கண்டியில் தொடங்கிய ஐம்பது நாடுகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட மாநாட்டில் கோடிகாட்டப்பட்டிருக்கிற தைக் கவனித்தீரா என்றபடி வந்தார் நண்பர் பரமசிவம்.

இவ்வளவு பெரிய முக்கிய மாநாடு நடைபெறும்பொழுது நீர் இந்த இரண்டு [illegible]ஷயத்தைத் தூக்கிப்பிடித்துக் கொண்டு வருகிறீர். நீர் எதைச் சொ[illegible]லுகிறீர் என்று கேட்டேன்.

பொதுக்கட்டமைப்பு ஒரு நிர்வாக ஏற்பாடு என்றாலும், இது சமாதான முயற்சிகளின் ஒரு பகுதி என்றே கருதுகிறேன். இதன் மூலம் பேச்சுவார்த்தைகள் மூலமான தீர்விற்கான பல வாயில்கள் திறக்கின்றன. சில தீவிரவாத சக்திகள் எதிர்த்தாலும் கூட -இதனைத் தொடர்ந்து முன்னெடுப்பது என்ற உறுதி தொடர்ந்து நீடிக்கு மெனக் கருதுகிறேன் என்றும்,

பெரும்பான்மையானவர்கள் இதில் எனக்கு ஆதரவு தரு கின்றனர். சிலரின் உயிருக்கு ஆபத்து இருப்பது எனக்குத் தெரி யும். இதற்காகப் பொறுப்புகளை உதறித்தள்ள முடியுமா? என் றும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்த மாநாட்டில் உரையாற்றுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இது மட்டுமல்ல, எமது அரசாங்கத்துக்குள்ளும், வெளியிலும் தீவிரவாத சக்திகள் இருக்கின்றன என்றும் சந்திரிகா அம்மையார் பேசியிருக்கிறார். இதேசமயம் இந்த மாநாட்டில் ஜனாதிபதி பேசி முடித்ததும், ஹெல உறுமய புத்தபிக்கு அத்துரலிய ரத்தின தேரர் எழுந்து கூச்சல் போட்டதுடன், துண்டுப் பிரசுரங்களும் விநியோ கித்திருக்கிறார். இவை எதனைக் காட்டுகிறது. இதைத் தான் முத லில் சுருக்கமாகச் சொன்னேன் என்றார் பரமசிவம்.

இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படக்கூடாது என்று கூறும் ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறு மயவும் மாற்றுத் திட்டங்களை முன்வைக்கவேண்டும். அல்லது அவர்கள் போர் ஒன்றுக்குத் தயாராக இருந்தால் முதலில் அவர் களும், அவர்களின் பிள்ளைகளும் போர்க்களத்துக்குச் செல்ல முன்வருவர்களாகவிருந்தால் ஆயுதப் பயிற்சி அளிக்கத் தயார் என்றும் அம்மையார் ஆவேசமாகப் பேசியிருக்கிறாராமே என் றேன்.

ஓமோம் அப்படித்தான் பேசியிருக்கிறார். உலக நாடுகளின் பிரதி நிதிகள் மத்தியில் இவ்வளவு உறுதியாகவும், ஆக்ரோஷமாகவும் பேசியிருக்கும் சந்திரிகா அம்மையார் பொதுக்கட்டமைப்பை மட்டுமல்ல தொடர்ந்து இடைக்கால தன்னாதிக்க அதிகார சபை யிலும் நல்லதொரு தீர்மானத்தை எடுப்பாரென்றே தோன்றுகிறது. பகிரங்கமாக எதிர்ப்புக்காட்டும் சக்திகளை அவர் பகிரங்கமாகவே சாடியிருக்கிறார்.

ஆனால் நம்மட பேர்வழிகள் சிலர் ஆலோசனை என்ற பெயரில் கடிதங்கள் எழுதியும், அறிக்கைகள் விட்டும், அவரை இவரைத் தேடிப்பிடித்தும், பறந்துபோய் காவடி எடுத்தும், குத்தி விடாமலும், குழப்பிவிடாமலும் இருக்கவேண்டுமே என்பது தான் என்கவலை என்றார் பரமசிவம்.

அது சரி அம்மையார் உயிராபத்து என்று பேசியிருப்பதைப் பார்த்தால் - இன்னமும் அவரது கணவர் வியஜகுமாரணதுங்க வின் கொலை அவரது கண்முன்காட்சியளித்துக் கொண்டிருப் பதுபோல்தான் தோன்றுகிறது என்றேன்.

அதெப்படி மறக்கமுடியும்? தமது செயற்பாடுகளுக்கு ஒவ் வொரு எதிர்ப்பும் அந்தப் பகுதியிலிருந்து வெளிவரும்போது, அவ ரது கணவர் அவர் கண்முன்தோன்றாமலிருப்பாரா என்றார் பரமசிவம்.

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக்கட்டி யெழுப்புவதற்கு உலக நாடுகளும், உலக வங்கியும் மற்றும் அமைப்புகளும் உதவுவதற்குத் தயாராகத்தானிருக்கின்றன. ஆனால், நமது நாட்டிலுள்ளவர்கள் தானே இவற்றுக்கு இடையூ றாக இருக்கிறார்கள். இந்த உதவிகளைக் கொடுத்தால் விடுத லைப் புலிகளின் தனி ஆட்சியை அங்கீகரித்தது போலாகிவிடும் என்கிறார்கள் ஜே.வி.பியும், உறுமய புத்த பிக்குகளும்.

இங்கு பாதிக்கப்பட்ட மக்கள் படும் அவலங்களை நேரில் பார்க் காத நம்மவர்கள் - விடுதலைப்புலிகளை ஏன் இதில் சேர்க்க வேண்டும். அரசாங்கம் தனது அதிகாரங்கள் மூலம் இதைச் செய் யலாமே என்று அரசுக்கு இலவச ஆலோசனை கூறுகிறார்கள். தங்களால் எதுவும் செய்யமுடியாது. அதற்கான ஆற்றலும் இல்லை, ஆதரவும் இல்லை. செய்யும் ஆற்றலும், அறிவும், ஆதரவும் உள்ளவர்கள் மக்களுக்கு உதவி செய்யவும்விட மனமில்லை.

வைக்கோற் பட்டடையில் ஏதோ நிற்குமாமே அந்த நிலையில் இருக்கிறார்கள். இந்தப் பொதுக்கட்டமைப்பு உருப்படாமலிருக் கும்வரை அவர்களுக்கு இருந்துவரும் மகிழ்ச்சியே மகிழ்ச்சி என் றேன்.

உலக நாடுகளின் பிரதிநிதிகள் மத்தியில் இவ்வளவு உறுதியா கத் தெரிவித்த சந்திரிகா அம்மையார் - இனி யார் என்ன சொன் னாலும் பொதுக்கட்டமைப்பு அமைக்கும் விஷயத்தில் பின்வாங்கு வார் என்று நான் நினைக்கவில்லை. இதில் இன்னொரு விடய மும் இருக்கிறது என்றார் பரமசிவம்.

என்ன இன்னொரு விடயம்? என்றேன்.

பத்து ஆண்டுகளுக்குமேல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவி வகித்திருக்கிறார். இந்த வருடமோ அவர்கள் சொல்வது போல் அடுத்த ஆண்டோ இந்தப் பதவி முடியப் போகி றது. இனி ஒரு தவணைக்கு இப்போதுள்ள அரசியலமைப்பின்படி ஜனாதிபதி பதவியில் தொடர்ந்திருக்க முடியாது.

முதலிலே திட்டமிட்டபடி அரசியலமைப்பை மாற்றி நாடாளு மன்றத்துக்கு, பிரதமருக்கு அதிக அதிகாரமுள்ளதாகப் புதிய அரசி யலமைப்பைக் கொண்டுவர வேண்டும். அல்லது மூன்றாவது தவ ணையும் ஜனாதிபதியாகப் பதவியில் இருக்கக் கூடிய முறையில் அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவர வேண்டும்.

இவற்றில், எதற்கென்றாலும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும். இந்த நிலையில் பொதுக் கட்டமைப்பைச் செயற்படுத்துவதன் மூலம், நாடாளுமன்றத்தில் அதிக ஆதரவைப் பெறமுயற்சிக்கலாம்.

பொதுக்கட்டமைப்பைத் தொடர்ந்து தன்னாதிக்க அதிகார சபைப் பிரச்சினைக்கும் முடிவுகட்டி, இனப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு காணவும் வழியேற்படுத்திவிட்டால் சந்திரிகா அம்மையார் நாட்டின் முடிசூடா மகாராணியார் என்று போற்றும் நிலையும் ஏற் படலாமல்லவா? இப்படியும் சந்திரிகா அம்மையார் சிந்தித்திருக் கலாமல்லவா? என்றார் பரமசிவம்.

அவர் சிந்தனை இருக்கட்டும், உமது இந்தச் சிந்தனைக்கு உமக்கு என்ன தருவது என்றுதான் எனக்குப் புரியவில்லை என்றேன்.

பரமசிவம் தூரத்தில் போய்க் கொண்டிருந்தார்.

## வாசகர் நோக்கு...

### தனியார் பஸ்சேவைதிருந்துமா?

பஸ் வண்டியின் மிதிபலகையில் பயணிகள் பயணம் செய் வதும் பயணிகளை பஸ்ஸினுள் அடைத்துச் செல்வதும், பயணி களை ஏற்றாமல் செல்வதும், பயணிகளை அவசரப்படுத்தி ஏற்றுவதும், இடைப்பட்ட இடங்களில் ஊர்ந்து செல்வதும் மற்றைய பஸ் வண்டிகளை முந்திச் செல்வதையும் யாழ்ப் பாணத்துத் தனியார் வாகனங்களின் தற்போதைய செயற்பாடாக இருப்பதைக் காணலாம்.

இதனால் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

பஸ் வண்டிகள் போட்டிபோட்டு ஓடுவதால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதும் வழமையாகிப் போகிறது. அண்மையில் விபத்து ஏற்பட்டு ஒருவர் உயிரிழந்ததால் அந்தப்பகுதி மக்களால் பஸ் எரிக்கப்பட்டது. அதற்காக தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கம் ஒருநாள் முழுவதும் பஸ்ஸை சேவையில் ஈடுபடாது பகிஸ்கரிப்புப் போராட்டம் நடத்தினார்கள். அதேவேளை அன்றைய தினம் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டி கள் போக்குவரத்தில் ஈடுபட்டபோது அவை மறித்து சேதப்படுத்தப் பட்டன. ஆனால் இவ்வாறு போராட்டம் செய்தும் அண்மையில் தனியார் போக்குவரத்து பஸ் விபத்துக்குள்ளாகி ஒருவர் மரண மடைந்தார்.

இவ்வாறான சம்பவத்திற்கு யார் பொறுப்பு? தனியார் போக்குவரத்துச் சங்கம் இவ்வாறான சம்பவம் நடைபெறாமல் தடுக்க முன்வரவேண்டும்.

மானிப்பாய் யூட்


சிந்திக்கும் வேளையில்....

சு.ஞாலவன்

# கையடக்கமான பிசாசும், கற்றுக்கொள்ள வேண்டியவைகளும்!

# சிறுவர்களுக்கான தமிழ் படைப்புலகமும், நம் சமுதாயமும் - ஓர் சுயவிமர்சனம்

உலகெங்கும் இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவரினது இதயங்களையும் ஆக்கிரமித்து நிற்கும் குட்டிப்பிசாசுதான் 'போக்மூன்'. கையடக்கமான பிசாசு என்று பொருள்படும். Pocket Monsters இன் எழுத்துச் சுருக்கமே Pokemoon ஆகிவிட்டது. இன்று உலகளாவிய ரீதியில் 25 மொழிகளில், 68 நாடுகளில் தொலைக்காட்சித்



தொடர்கள் மூலம் மழலை இதயங்களைக் கவர்ந்து நிற்கும் Pokemoon, ஆரம்பத்தில் கணினி விளையாட்டாகத் தான் பிறப்பெடுத்தது. இவ்வாறு முளைவிட்டெழுந்த இதன் ஆரம்பம் - 1996 ஆம் ஆண்டில் சாதாரணமானதாகவே இருந்தது. இருந்தாலும், 1997 இலே Pitachu என்ற பெயரிலே அறிமுகப்படுத்தப்பட்ட தொலைக் காட்சித் தொடர் மூலம் தான், அது குறுகிய காலத்திலேயே தனது பிரகாசமான எதிர் காலத்தைக் கட்டியம் கூறுவது போல அதிக பிரபல்யத்தை ஈட்டிக்கொண்டது. இன்று வரையில் Pokemoon தொடர்பான கணினி விளையாட்டுக்கள் 100 மில்லியனுக்கு மேல் விற்பனையாகிவிட்டன.

சிறுவர்களின் மன நிலையை அறிந்து, அவர்களின் உளவளத்தைக் கருத்திற் கொண்டு ஆக்கப்பட்ட இதன் தொடர்ச்சியாக 1998 ஆம் ஆண்டில் திரைப்படம் ஒன்றும் வெளியாகியது. இதனுடன் ஜப்பானிலே பிறந்த Pokemoon உலகச் சந்தையைக் கெட்டியாக ஆக்கிரமித்துக்கொண்டது. குழந்தைகளின் பால்போத்தலில் இருந்து பம்பர்ஸ், படுக்கை விரிப்பு, பாடசாலைப்பை என இதன் ராச்சியம் நீண்டு செல்கிறது. 1970 ஆம் ஆண்டுகளிலே ஜப்பானில் நிறுவப்பட்ட Character Licensing business and Character Date bank பிரபல்யமான கார்டூன் வடிவங்களுக்கான காப்புரிமையையும், அதனைப் பயன்படுத்திக்கொள்வதற்கான விற்பனை உரிமம் பற்றியுமான அலுவல்களைக் கவனித்து வருகிறது. போயும் போய் சிறுபிள்ளைகளுக்கான விளையாட்டுத்தனமான விவகாரங்களுக்காக வேலைவெட்டியில்லாமல் இவ்வளவு மினக்கெடுகிறார்களே என்று பரிதாபப் படுகிறீர்களா? Micky Mouse, Donald Duck, Goofy, Winnie the Pooh, Tarzan, Cinderalla உட்பட லொஸ்ஏஞ்சல்ஸ் இலும், பரிஸிலும் என இரண்டு பாரிய உல்லாசப் பூங்காக்களைக் கொண்டிருக்கும், கலிபோர்னியாவில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் அமெரிக்க நிறுவனமான Walt Disney இன் 2002 ஆம் ஆண்டுச் சொத்துப் பெறுமதி 40 பில்லியன் US$ ஆகும். அதே ஆண்டில் அதன் லாபம் மட்டும் 4.5 US$ இலங்கை சுனாமியைக் காட்டி இரந்து நிற்பது 1.3 US$ ; சமாதானப் பேச்சுவார்த்தையைக் காட்டி சுருட்ட நினைத்தது 4.5 US$. அதாவது - Walt Disney இன் விளையாட்டுப்போக்கால் ஒரு வருடத்தில் அதற்குக் கிடைத்த வினை, முழு இலங்கைத் தீவையும் முழு அளவில் நிரந்தரமாக அபிவிருத்தி செய்யப்போதுமானது.

சிறுவயதில் அப்பாவின் அறிவுறுத்தலின்படி, அம்மாவின் தெரிவில் மாதம் ஒரு படம் தியேட்டருக்குச் சென்று பார்ப்பது வழக்கத்திலிருந்தது. பின்னர் வந்த வீடியோ நாகரிகம் (?) வீட்டுக்குள் அனுமதிக்கப்படாதிருந்தாலும், அதன் ஆக்கிரமிப்பு கடுமையானதாக இருந்தது. மூன்று பக்திப் படங்களுக்கு (?) தூங்கி விழுவதே சிவராத்திரி என்றும், சமூக வழமை மாறிப்போனது. இந்த வகையில் அயல் வீட்டில் நடந்த மங்கள வைபவத்தை அடுத்து 'சின்னாக்களின்ர நல்ல பம்பல் படம்' என்று அனைவராலும் பேசப்பட்டதொரு படம் காண்பிக்கப்பட்டது. கே.பாக்கியராஜின் 'முந்தானை முடிச்சு' தான் அது.

பிஞ்சில் வெம்பிய வகையில் சிறுவர்களைக் காண்பித்தது மட்டுமன்றி, 'வா வா வாத்தியாரே வா! வஞ்சிக் கொடி ! என்னைக் கட்டிப்பிடி! உன் இஷ்டப்படி!...' என்ற பாடலுக்கு அவர்களை ஆண் - பெண்ணாக அபிநயிக்க வேறு வைத்திருந்தது. அப்போதைக்கு அந்தப் படம் பெரிதாய்



விளங்கவில்லை. அப் படிப்பட்ட அபிநயம் என்னுடைய அன்றைய வயதுக்கு கூச்சம் நிறைந்த சிரிப்பை மட்டுமே தந்தது. பின்னாளில் தான் கதை விளங் கியது. தற்போது பத் திரிகைகளில் 'நியூ' என்றொரு படத்தின் கதை பற்றி அதிகம் பரபரப் பப்பட்டது. அது குறித்து அதன் தயாரிப் பாளர் கூறுகையில்–

அந்தப் படம் 'சிறுவர்களுக்குமானது' என் கிறார். 'The Kid' என்றும் ஓரளவு பழைய ஆங்கிலப்படத்திலே இயந்திரமயமான தொழில் அழுத்தங்களுக்குள்ளேயே வாழ் ந்து பழகிவிட்ட கதாநாயகனிடம், தான் தொலைத்துவிட்ட அந்தச் சிறிய வயதிற்கே உரிய பட்டாம்பூச்சிப்பருவத்தை வாழவேண்டும் என ஒரு ஏக்கம். அது மன உழைச்சலாக அவரை வாட்டுவதால், தான் வாழாமல் தொலைத்த பருவத்தை மீண்டும் சிறுவனாகி வாழ்தலால், தான் வாழாமல் தொலைத்த பருவத்தை மீண்டும் சிறுவனாக வாழ்ந்தால், மகிழ்வடைவதால் அவரின் ஏக்கம் நீங்குகிறது. ஒரு கனமான விடயத்தை இதமான தீர்வுடன் அழகுற அந்தத் திரைப்படம் சொல்லி நிற்கிறது. அதே கதைப் போக்கின் 'வளம் மாறிய வக்கிரப்போக்கே' 'நியூ'வாக அமைந்திருக்கிறது. இப்படிப்பட்டவர்களால் கருத்தியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் எவ்வித பின்னடைவுகளோ அன்றி, எதிர்ப்புகளோ இன்றி தமிழுலகில் தலைதூக்கி, நிமிர்ந்து திரிய முடிகிறது! புரட்சித் தமிழன், இளைய தளபதி, செந்தமிழன், இளைய தமிழன், மாவீரன் போன்ற அடைமொழிகளுடன் உலாவி வரும் இவர்கள் - தமிழுக்கு என்ன செய்து கிழித்தார்கள்? எந்தப் போருக்குப் படை நடத்தியதால் இந்தப் பட்டங்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டது? தமிழுலகைப் பேயர்கள் என்று யாரோ ஒரு கும்பல் எடுத்த முடிவை முழுத்தமிழரும் ஏற்றுக்கொண்டு விட்டோமா?

சரி மீண்டும் இளையவர்களுக்கான சர்வதேச படைப்புகளுக்கு வருவோம். Barbie எனப்படும் சிறிய பெண்பொம்மைகள் உலகப்பிரசித்தி பெற்றவை. இந்த பாபி ஆபிரிக்காவில் கறுத்த தோல்நிறத்தைக் கொண்டவள். இவளது ஊடுருவலைக் கட்டுப்பாடற்ற மேலைத்தேசத்தின் கலாசார ஊடுருவல் என்று ஈரானிய ஆட்சிபீடம் எதிர்த்தபோது, மொட்டாக்குப்போட்ட அரேபிய பாபி அறிமுகப்படுத்தப்பட்டாள். இன்று Barbie உட்பட Batman, Heman, Superman, Harry Potter என்று இன்னும் பல வெளியீடுகளின் உரிமம் கலிபோர்னியாவின் Mattel நிறுவனத்துக்கானது. 2002 ஆம் ஆண்டில் 8 பில்லியன் US$ ஐ சொத்தாகவும், 1.2 பில்லியன் US$ ஐ (120,00,00,000 US$ சுனாமியால் இலங்கைத் தீவுக்கு ஏற்பட்ட பொருள் இழப்புக்கு ஈடானது) வருட லாபமாகவும் கொண்டிருக்கும் Mattel நிறுவனத்துக்காக மொத்தம் 27 ஆயிரம் பேர் வேலை செய்கின்றனர். ஆமாம் இந்தவிடயத்தில் எமது நிலை எவ்வாறுள்ளது? ஒவ்வொரு இரண்டாவது நாளும் தமிழிலே ஒரு திரைப்படம் வெளிவருகிறது. இதிலே மூன்றிலொரு பங்கு மொழிபெயர்க்கப்பட்ட தெலுங்கு மற்றும் கன்னடப் படங்கள். தரமான படங்களை அதிகளவில் கொடுக்கும் கேரளப் படங்கள் மொழிபெயர்க்கப்படுவது குறைவு. சரி இவ்வளவு பெருந்தொகையில் படங் களைத் தந்த தமிழ்திரையுலகு எனக்குத் தெரிந்த வரையில், தனது 65 வருடகால வரலாற்றில் முழுக்க முழுக்க சிறுவர் களுக்கு முக்கியத்துவம் கொடுத்து 'மை டியர் குட்டிச்சாத்தான்' எனப்படும் ஒற்றைப் படம் மட்டுமே தந்திருக்கிறது. விமர்சனத்துக்குரியதாக இருந்தாலும் நம்மிடம் மிஞ்சியது இந்த ஒற்றைப்படம் மட்டுமே! இது தவிர வழமையான படங்களிலே சிறுவர்களுக்குரிய உலகத்தைப் புரிந்துகொண்ட பாடல்களாக 'பந்தம்' இதில் வரும் கதை சொல்லும் பாடல், சாளினி சிறுமியாக சிவாஜியின் முதுகிலிருந்து பாடிய 'அங்கிள் அங்கிள்! பிக் அங்கிள்!', ரஜினியின் 'ராஜா சின்ன ரோஜாவோடு காட்டுப்பக்கம் போனாராம்' மற்றும் தற்காலத்திலும் ஆங்காங்கே வரண்ட பூமியில் துளிகளாக விரல் விட்டு எண்ணக்கூடிய சில பாடல்கள் வெளிவந்துள்ளன. இல்லை இல்லை இன்னும் இருக்கிறதென்று நீங்கள் சில பாடல்களைக் குறிப்பிட முனையலாம்.

'அஞ்சலி' படம் தரமானது; ஆனாலும் குழந்தைகளை மையப்படுத்தியதல்ல. 'மொட்டை மாடி, மொட்டை மாடி! ஒரு லவ் ஜோடி! இலவச மாக...' அதில் சிறுவர்களால் பாடப்பட்டிருக்கிறது. இன்னும் 'சிக்குபுக்கு சிக்குபுக்கு ரயிலு! கலக்கிறா பார் இவ ஸ்ரைலு!' சிறு வன் (?) தான் பாடுகிறான். நாம் உண் மையில் எங்கு நிற்கிறோம்? மனம் ஒத்துக் கொள்ள மறுத்தாலும், மிகவும் கேவலமான மட்டமான ரசனையைக் கொண்டவர்களாக நாம் உள்ளோமே இல்லையா?

பதினெட்டு வயது வந்தவுடனே பிள்ளைகளைக் கழற்றி விடப்பார்க்கும் மேலை நாட்டவர்கள் - தங்கள் பிள்ளைகளின் விடயத்தில் எடுத்துக்கொள்ளும் சிரத்தையுடன் பார்க்கும்போது, எம்முடைய அக்கறை எவ்வளவுக்கு இருக்கிறது.

மீசை முளைத்த பின்னும் வீட்டில் வெட்டியாக இருக்கும் மகனுக்குப் பெண் தேடுவதிலும், ஊர்வம்பளப்பதையே முழுநேர மூச்சாகக் கொண்ட மகளுக்கு நகை நட்டுகள் சேர்ப்பதில் தான் எங்களது கைங்கரியம் எல்லாம்! பிறந்த பிள்ளைக்குப் புரியாத வயதில் பிறந்தநாளென்று ஊரையே கூட்டி வீடியோ வெக்கையில், நகைப்பாரத்தில், அனைவராலும் அன்பாகத் தீத்தப்படும் கேக் கொடுக்கும் அஜீரணத்தைப் பரிசளிக்கிறோம்! அவர்களது ஆரோக்கியமான மகிழ்வுகளுக்கும், வளப்படுத்தல்களுக்குமான உருப்படிகள் ஏதும் எங்களிடையிலிருந்து எழுவதில்லை.


பெரும்பான்மையினரால் அவற்றின் முக்கியத்துவம் சீரியஸாக ஏற்றுக்கொள்ளப்படுவதுமில்லை. அப்படியே ஏதும் வெளிவந்தாலும் 'எனக்கு 20 உனக்கு 18' போல பிரபல்யமடைந்து விடுவதில்லை. கையைச் சுட்டுக்கொண்டவர்களாக கலைஞர்கள் கழுத்தறுக்கப்படுகிறார்கள்.

காரணம் - எங்கள் ரசனை மட்டமும், மேலெழுந்த போக்குமே!

சிறுவயதில் சூரன் போர் பார்க்கப்போகும் போது, மீண்டும் மீண்டும் பார்த்து அலுத்தும், பாடங்களில் படித்துக் களைத்துப் போன அதே கட்டங்களே அரங்கேறும். அந்த உருவங்களை விடப் போர் நடக்கும் வெளியில் மக்களை ஒழுங்கமைப்பதற் காகக் கரடி, குரங்கு என்று வெவ்வேறு மிரு கங்களின் பொம்மை ஆடைகளைப் போட்டுக்கொண்டு வருபவர்களின் ஆட்டமும், அவர்கள் விடும் சேட்டையும் பார்ப்பதற்கு நன்றாக இருக்கும். இப்படியாகக் குரங்கை யும், கரடியையும் பார்ப்பதனால் சூரன் போருக்குச் செல்வது எப்போதுமே அலுத் ததில்லை.

இறைவனைக் கூட மழலையாக மனதிலேற்றிப் பார்க்கவேண்டும் என்று விரும்பியதால்தான், நம்மிடம் குழந்தை வேலனையும், யேசு பாலனையும் கும்பிடும் வழக்கம் தீவிரமாக உள்ளது.


இருந்தும் என்றுமே நாம் தொட்டுவிட



வேண்டுமென்று முயற்சிக்காத நிலாவைப் பிடித்துத் தருவதாக வாக்களித்து, குழந்தைகளுக்கு நிலாச்சோறு ஊட்டுவதைப் போலவே, அவசியமான பலத்தையும் 'தனக்கடாச்சிங்களம்' என்று மறுதலித்து விட்டு, வெறும் வயிற்றுத்தேவைகளுக்காகவும், சுவை வகை அறியாத ரசனைக்காகவும் வாழுதல் செய்கின்றோமா? விருப்பு, வெறுப்பு அறியாத இயற்கையின் கோரமான சுனாமியை அரக்கன் என்கிறோம். அதனால் அதிகம் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காகவெனக் கொடுப்பதற்கு, மேற்குறித்தவற்றை ஒத்த சுதேசியப்படைப்புகளை உருவாக்குவதற்கு இதுவரை காலமும் ஊக்கமளிக்காத நாம் மட்டும் என்ன வாம்???.

# கிளர்ச்சிவாத நடவடிக்கைகள் ஈராக்கில் தோற்கடிக்கப்படும்

## பிரதமர் இப்ராஹிம் ஜபாரி சூளுரை



(பாக்தாத்)

இனரீதியான போர் முறைக்குள் ஈராக்கியர்கள் தள்ளப்படுவதற்கான முயற்சிகளுக்கு இடங்கொடுக்கமாட்டார்கள் என தான் நம்புவதாகவும், கிளர்ச்சிவாதிகளின் நடவடிக்கைகள் கண்டிப்பாக தோற்கடிக்கப்படுமெனவும் ஈராக்கிய பிரதமர் இப்ராஹிம் ஜபாரி தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி செய்திச் சேவைக்கு முதன்முறையாக வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

அண்மைக்காலமாக ஈராக்கில் இடம்பெற்று வரும் படுகொலைகள் நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கான முயற்சியாகும். பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த சுனி முஸ்லிம்கள் கண்டிப்பாக அரசியலுக்குள் கொண்டுவரப்படவேண்டும்.

ஈராக்கில் அரசியல் ரீதியான முன்னேற்றத்தைக் காணவிரும்பாத இளைஞர்கள் தேவையென்றால் வேறு வழியில் செல்லட்டும். தற்போது சுனி அராபியர்கள் பெருமளவில், பல பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதன் மூலம் இளைஞர்கள் போராட்டத்திற்கு செல்வதனை தடுக்க முடியும்.

கிளர்ச்சிவாத நடவடிக்கைகளை ஒடுக்க இராணுவ மற்றும் அரசியல் ரீதியில் கூட்டு நடவடிக்கை திட்டமொன்று உருவாக்கப்படவுள்ளது. இனம், மதம், பிரிவு என்றில்லாமல் நாம் அனைவரும் ஈராக்கியர்கள் என சமரசமாக வாழ்வோம். ஈராக்கியர்கள் அனைவருடனும் பேச்சு நடத்த எப்பொழுதும் தயாராகவே உள்ளோம். ஆயுதம் ஏந்திய ஈராக்கியர்களும் பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம். ஆனால், நாட்டிற்கு வெளியே உள்ள இஸ்லாமிய அடிப்படைவாதிகளுடன் எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தப்படமாட்டாது. அவர்கள் ஈராக்கிய மக்கள் தொடர்பாக எவ்வித அக்கறையும் எடுக்கவில்லை.

ஈராக்கின் புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பாக விசேட அமைச்சரவை குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு விரைந்து செயற்பட்டு அரசியலமைப்பை எதிர்வரும் ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் அமைக்குமென அவர் தெரிவித்தார்.

## பெண்கள் தேர்தலில் போட்டியிட குவைத் நாடாளுமன்றம் அனுமதி



குவைத்தில் பெண்கள், அரசியலில் போட்டியிடவும், தேர்தலில் வாக்களிக்கவுமான பூரண உரிமையை அந்த நாட்டு நாடாளுமன்றம் வழங்கியுள்ளது.

இந்த அனுமதியின் மூலம் இந்த வருடம் குவைத்தில் நடைபெறவுள்ள தேர்தலில் முதன்முறையாக அந்த நாட்டுப் பெண்கள் வாக்களிக்கவும், போட்டியிடவும் முடியும்.

சுமார் பத்து மணிநேரம் நடந்த நாடாளுமன்ற விவாதத்தின் பின்னர் இந்த அனுமதி வழங்கப்பட்டது. 35 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 23 பேர் ஆதரவாகவும், 11பேர் எதிராகவும் வாக்களித்ததுடன் ஒருவர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

இந்த அறிவிப்பினை குவைத் நாடாளுமன்ற சபாநாயகர் வெளியிட்டவேளை, நாடாளுமன்றின் பின்வரிசையில் இருந்தவர்கள் கைதட்டி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

குவைத் பெண்கள் தமது அரசியல் உரிமையைப் பெற்றதையிட்டு நான் அவர்களைப் பாராட்டுகின்றேன் என குவைத் பிரதமர் ஷேக் சபா அல் - அகமத் - அல் - சபா தெரிவித்தார்.




# அமெரிக்க நிறுவன பெண் பணியாளர் ஆப்கானிஸ்தானில் கடத்தப்பட்டார்!



(காபூல்)

ஈராக்கில் உள்ள வெளிநாட்டவர்களைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்று அவர்களைக் கொலைசெய்வது தொடர்கதையாகி வருகிறது.

இதேபோன்ற நடவடிக்கைகள் தற்போது ஆப்கானிஸ்தானிலும் தலைதூக்கியுள்ளது. ஆப்கானிஸ்தானில் தலிபான் அரசு அகற்றப்பட்ட பிறகும் பின்லேடன், முல்லா ஓமர் ஆகியோரின் ஆதரவாளர்கள் தங்கள் நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியுள்ளனர்.

ஈராக்கைப்போல ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்காவின் நேச நாடுகள் மறுசீரமைப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றன.

தலைநகர் காபூல் நகரில் உள்ள ஒரு அமெரிக்க நிறுவனத்தில் பணியாற்றி வந்தவர் கிளிமென் டினா மன்டோனி. பெண் அதிகாரியான இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்.

இவர் வேலை முடிந்து தனது காரில் இருப்பிடத்திற்கு திரும்பிக்கொண்டிருந்தபோது 4 கிளர்ச்சிவாதிகள் இவரது காரை வழிமறித்தனர்.

துப்பாக்கியைக் காட்டி இவர்கள் சாரதியை மிரட்டியதுடன், சிமென் டினாவை மட்டும் கிளர்ச்சிவாதிகள் வெளியே இழுத்து அவரை கடத்திச் சென்றுவிட்டனர்.

பெண் அதிகாரியைக் கடத்தியது ஏன்? அவர்களது கோரிக்கைகள் என்ன என்பதைக் கிளர்ச்சிவாதிகள் தெரிவிக்கவில்லை.

ஏற்கனவே கிளர்ச்சிவாதிகள் ஆப்கானிஸ்தானில் உள்ள வெளிநாட்டவர்கள் வெளியேற வேண்டும் என்று மிரட்டல் விடுத்து வருகிறார்கள். காபூல் நகரில் 3000 வெளிநாட்டவர்கள் உள்ளனர்.

தற்போது கடத்தப்பட்டுள்ள பெண் அதிகாரியை மீட்க இத்தாலி அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. அவரது நிலை என்ன என்பது தெரியவில்லை.

# குர் ஆன் குறித்து வெளியிட்ட செய்தியை நியூஸ் வீக் சஞ்சிகை வாபஸ் பெற்றுள்ளது




குவான்ரனமோ சிறையில் அமெரிக்க விசாரணையாளர்களால் இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆன், மலசலகூட குழிக்குள் போடப்பட்டதாகத் தெரிவித்து அமெரிக்க நியூஸ் வீக் சஞ்சிகை வெளியிட்ட செய்தியை, வாபஸ் பெறுவதுடன், மன்னிப்பும் கோருவதாக தெரிவித்துள்ளது.

தமது இந்தச் செய்தியை அமெரிக்க இராணுவ விசாரணையாளர்கள் உறுதிப்படுத்த தவறிவிட்டதாகவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

வெளியிட்ட செய்தியை வாபஸ் வாங்குவதென இந்தச் சஞ்சிகை எடுத்த முடிவு நல்லதொரு முதற்படியெனவும், எனினும், இந்தச் செய்தியால் காயப்பட்டுப்போன மக்களின் மனங்களை ஆற்றுப்படுத்துவதென்பது மிகவும் கடினமென வெள்ளை மாளிகைப் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த வாரம் இந்தச் சஞ்சிகையில் வெளியிடப்பட்ட இந்தக் கட்டுரையையடுத்து அமெரிக்காவுக்கு எதிராக ஆப்கானில் நடத்தப்பட்ட வன்முறைகளில் 15 பேர் உயிரிழந்ததுடன், கோபமடைந்த குழுக்கள், ஆப்கானின் பல நகரங்களிலுள்ள ஐ.நா. மற்றும் சர்வதேச அமைப்புக்களின் அலுவலகங்களையும் தாக்கினர். அத்துடன் இந்தச் செய்தியை அடுத்து ஏற்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பாகிஸ்தானிலிருந்து, இந்தோனேஷியாவரை சுமார் 100 பேர் வரை காயமடைந்தனர்.

இதுகுறித்து நியூஸ் வீக் சஞ்சிகையின் ஆசிரியர் விற்ரேக்கர் தெரிவிக்கையில், எமது இந்தச் செய்தியால் ஏற்பட்ட பிழைக்காக நாம் மன்னிப்



புக் கோருகின்றோம். இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம் என நேற்றுமுன்தினம் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக எவ்வித குற்றச்சாட்டும் வரவில்லையென பென்ரகன் தெரிவித்துள்ளது. எனினும் இது குறித்து தாம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாக ஆப்கானிலுள்ள அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

நியூஸ் வீக் சஞ்சிகை தனது செய்தியை வாபஸ் பெறுவதாக அறிவித்ததை பாகிஸ்தானின் ஆறு பழமைவாத இஸ்லாமியக் கட்சிகள் நிராகரித்துள்ளன.

## உஸ்பெகிஸ்தான் வன்செயலைக் கட்டுப்படுத்த

# பிரிட்டன் வெளியுறவுச் செயலர் அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சு!



உஸ்பெகிஸ்தானில் இடம்பெற்றுவரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் ஜக்சிரோ அமெரிக்காவிற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த ஜக்சிரோ ஆயுதங்களற்ற பொதுமக்கள் - எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவேளை அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு அவர்களை கொலைசெய்த சம்பவத்தை நியாயப்படுத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாது

சம்பவம் இடம்பெற்ற நகருக்கு உதவி நிறுவனங்கள், இராஜதந்திரிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் செல்வதற்கு உஸ்பெகிஸ்தான் அரசாங்கம் உடனடியாக அனுமதிக்க வேண்டுமெனத்தெரிவித்தார்.

அமெரிக்கா சென்றுள்ள ஜக்சிரோ உஸ்பெகிஸ்தானில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொண்டோ லீசா ரைசுடன் கலந்துரையாடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஈராக்கின் பாதுகாப்பு நிலைமை, ஈரானின் அணுத்திட்டம் தொடர்பாகவும் இவர்கள் கலந்துரையாடவுள்ளனர்.

இதேவேளை உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற அரசுக்கெதிரான பொதுமக்களின் எதிர்ப்பை அந்நாட்டு அரசு அடக்கியதை பிரிட்டனும், ஐரோப்பிய ஒன்றியமும் உடனடியாகவே கண்டித்த அதேவேளை, பயங்கரவாத நடவடிக்கைக்கு எதிராக போராடிவரும் அமெரிக்கா இதனை மெதுவாகவே கண்டனம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நேபாளத்தில் நடந்த சண்டையில் படைத் தரப்பிற்கும் பாரிய இழப்பு

(காத்மண்டு)

நேபாளத்தின் கிழக்குப் பகுதியில் மாவோ கிளர்ச்சிவாதிகளுடன் நடைபெற்ற மோதலில் எண்ணிக்கை குறிப்பிடமுடியாத வகையில் படையினரும் உயிரிழந்ததாக இராணுவம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்த தாக்குதல் சம்பவத்தில் மாவோ கிளர்ச்சிவாதிகளுக்கும் பெருமளவு சேதங்கள் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்த போதிலும், மாவோ கிளர்ச்சிவாதிகள் இது குறித்து எவ்வித தகவலையும் தெரிவிக்கவில்லை.

தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்திற்கு மேலதிக படையினர் அனுப்பப்பட்டுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவத்தில் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த சுயாதீனமான தகவலை உறுதிப்படுத்த முடியவில்லையென காத்மண்டுவிலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் சுசில் சர்மா தெரிவித்தார்.



இதேவேளை, நேற்றுமுன்தினம் நேபாளத்தின் மேற்குப் பகுதியில் தாம் மேற்கொண்டு வந்த உதவிப் பணி நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளதாக நான்கு சர்வதேச தொண்டு நிறுவனங்கள் அறிவித்துள்ளன. இதற்கு காரணம், தமது உள்ளூர் பணியாளர்கள் இருவர் மாவோ கிளர்ச்சிவாதிகளால் தாக்கப்பட்டதே காரணமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜே.வி.பியின் இறுக்கமான போக்கு கட்சிக்குள் பிளவு ஏற்பட வாய்ப்பு!

## கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு ஜே.வி.பி. தெரிவித்துவந்த கடுமையான எதிர்ப்புணர்வின் விளைவாக – அந்தக் கட்சியில் பிளவுகள் ஏற்படக்கூடுமென்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கண்டி உதவி வழங்கும் மாநாட்டில் பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்ற கூட்டத்திலேயே பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால், பேரினவாத ஜே.வி.பியால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படுமென்று ஜனாதிபதி சந்திரிகா பகிரங்கமாகக் குற்றம்சாட்டியிருந்தார்.

எனினும், ஜே.வி.பி அமைச்சர்கள் இரண்டாம் நாள் அபிவிருத்தி அமர்வுகளில் கோர்ட், ரை என்பன அணிந்து பங்கேற்றது பலரது புருவத்தை உயர்த்தியுள்ளது.

அபிவிருத்தி தொடர்பான மாநாட்டில் அமைச்சர்களின் பங்கேற்பானது இலங்கையில் அடிப்படை உண்மைகளை உணராமல் பேரினவாத கூச்சல் எழுப்பிக்கொண்டிருக்கும் ஜே.வி.பியின் எதிர்காலம் குறித்தும் சில கேள்விகளை எழுப்பியிருப்பதாக கொழும்பு கொள்கை வகுப்பாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேச நாடுகளாலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்ட விடுதலைப் புலிகளுடனான பொதுக்கட்டமைப்பை இனியும் எதிர்த்துக் கொண்டிருப்பது முட்டாள்தனமானதென்றும், பொதுக் கட்டமைப்பை ஆதரிப்பதே நியாயமான நிலையென்றும் ஜே.வி.பியின் ஒரு பிரிவினர் முடிவுக்கு வரலாமென்றும் கருதப்படுகிறது.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட விரும்புகின்ற ஜே.வி.பியின் ஒரு பிரிவினர் ஜனாதிபதி சந்திரிகாவின் கட்சியிலேயே இணையக் கூடுமெனவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அபிவிருத்தி அமர்வுகளில் ஜே.வி.பி. பங்கேற்றிருப்பது பொதுக்கட்டமைப்பு பிரச்சினையில் மிகவும் முக்கியமானது என்று குறிப்பிட்டுள்ள கொழும்பு கொள்கை வகுப்பாளர், நடைமுறையில் பொதுக்கட்டமைப்பை எதிர்க்காமல் தமது வாக்கு வங்கிகளைத் தக்கவைத்துக் கொள்ளும் வகையில் பொதுமேடைகளில் இந்தப் பொதுக் கட்டமைப்பு தொடர்பான ஜே.வி.பி எதிர்த்துப் பேசக்கூடுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியின் கடும்போக்கான நிலைப்பாட்டை எதிர்க்கும் அதன் உயர்நிலைத் தலைவர்கள் சந்திரிகாவின் கட்சியில் இணைய முடிவெடுக்கும் நிலையில் ஜே.வி.பி உடைவது என்பது உடனடியாக நிகழக் கூடியதாகவும் இருக்கலாம் அல்லது குறிப்பிட்ட காலத்துக்குள் நிகழக்கூடியதாகவும் இருக்கலாமென்று அரசியல் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.

# உதவிகளை வழங்குவதற்கு கண்டி மாநாடு பெரும் வாய்ப்பு!

## இந்தியத் தூதுவர் நிருபமா ராவ்

உதவி வழங்கும் மாநாடு இலங்கையின் தற்போதைய நிலையை அடையாளம் காண்பதற்கான வாசல்களைத் திறந்திருப்பதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கண்டியில் இடம்பெற்ற உதவி வழங்கும் மாநாட்டின் முதலாம்நாள் அமர்வுக்குப்பின், அவர் வழங்கிய விசேட பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –

இலங்கை அரசாங்கம் முன்வைத்த விடயங்களை நாம் அறிந்துகொண்டோம். அமைச்சர்களும், அரசாங்க அதிபர்களும் சமர்பித்த அறிக்கைகளையும் நாம் கவனமாக உற்று நோக்கினோம்.

குறிப்பாக முல்லைத்தீவு, திருமலை, மாத்தளை ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் சமர்ப்பித்த அறிக்கைகள் முக்கியத்துவம் வாய்ந்தன. சுனாமியின் பின்னர் இலங்கை அரசு செயற்பட்ட விதம் பாராட்டத்தக்கது. இவ்வாறான பாரிய அனர்த்தமொன்றுக்கு இலங்கை முகம் கொடுத்த முதலாவது சம்பவமும் இதுவாகும்.

இந்தியா, இலங்கைக்கு மிக அண்மையிலுள்ள நட்புறவு நாடு என்ற வகையில் இலங்கைக்கு உதவியளிக்க கிடைத்தமை இந்தியாவிற்கு கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதுகின்றோம்.

இலங்கையின் தேவைகளுக்கு உடனடிப்பதிலை எம்மால் வழங்க முடிந்தது. அவர்களுக்கு தேவையானவற்றை எம்மால் உணரமுடிந்தது. இந்தியா பாரிய அனர்த்தங்களைச் சந்தித்ததனால், இலங்கைக்கு ஆலோசனை வழங்கவும் முடிந்தது. அத்துடன் எந்தச் சந்தர்ப்பத்தில் எதனைச் செய்ய வேண்டுமென்பதனை நாம் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளோம்.

நான் இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்றிருந்தேன். இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையே இதன் மூலம் சமனான அம்சங்களை நான் அறிந்துகொண்டேன். நாம் இவ்வாறான விடயங்களினால் பயன்பெற வேண்டும். இவற்றை இலகுவான விடயங்களாகக் கருதமுடியாது. இந்த உதவி வழங்கும் மாநாடு இலங்கையின் உண்மையான நிலையைக் கண்டுகொள்வதற்கான வாசல்களைத் திறந்திருக்குமென நான் நினைக்கிறேன். அத்துடன் எதிர்காலத்தில் முறையான திட்டங்களுக்கு இது வழிவகுக்குமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

## மட்டக்களப்பு நகரில் ஓட்டோ சாரதிகள் வேலை நிறுத்தம்!

மட்டக்களப்பு நகரில் ஓட்டோ சாரதிகள் நேற்றுக்காலை முதல் வேலை பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாண்டவன்வெளிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை ஓட்டோ சாரதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் விசுவலிங்கம் அருண்குமார் (வயது22) என்ற ஓட்டோசாரதியே சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சமாதான...

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் 3 பில்லியன் டொலர் நிதியுதவிகள் வழங்க உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. இதில் 95 சதவீதமானவை மீளச்செலுத்தத் தேவையற்றவையாகும்.

இந்த நிதியுதவிகளில் ஏற்கனவே ஜப்பான் வழங்கிய 100 மில்லியன் டொலர், சீனா வழங்கிய 350 மில்லியன் டொலர், சர்வதேச நாணய நிதியத்தின் 200 மில்லியன் டொலர் மற்றும் இந்தியா வழங்கிய 300 மில்லியன் என்பனவற்றுக்கு கடன் விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தை ஆரம்பித்து ஜனாதிபதி சந்திரிகா நிகழ்த்திய உரை– சர்வதேச சமூகத்தின் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கு எந்தவித நிபந்தனைகளையும் விதிக்காத போதும் சில வழிகாட்டல்களை வழங்கின.

இலங்கைக்கு வழங்க உறுதியளிக்கப்பட்ட 3 பில்லியன் டொலர்களும் சமாதான முன்னெடுப்புக்கள் மற்றும் பொதுக்கட்டமைப்பு என்பன முறையாக நடைமுறைப் படுத்தப்பட்டால் மட்டுமே கிரமமாகக்கிடைக்கும். இல்லையேல் இடைநிறுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்

## சர்வதேசத்தின் முன்....

முன்னால் இவ்வேறுபாடுகளைத் தெரிவிப்பது, இலங்கையினதும், சர்வதேசத்தினதும் இயல்புமுறையல்ல.

அவ்வாறே ஜனாதிபதிக்கும் கூறுவது முறையான செயலல்ல. அவர் முழு நாட்டுக்குமான ஒரு நிலைப்பாட்டையே தெரிவிக்க வேண்டும். எனவே, சர்வதேச சமூகத்தின்முன் அத்தகைய வேறுபாடுகளை ஜனாதிபதி தெரிவித்தது கண்டிக்கத்தக்கது.

ஜனாதிபதியின் கூற்றுக்கெதிராக செயற்படுவதற்கான வாய்ப்பைக் கூட்டத்தில் நாம் கொண்டிருந்தோம். ஆனால், ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்காறுகளையும், விதிமுறைகளையும் பின்பற்றாமல் இலங்கையினதும், ஜே.வி.பியினதும் மதிப்பைச் சர்வதேச சமூகத்தின் முன்னால் கறைப்படுத்துவதை ஜே.வி.பி விரும்பாத காரணத்தால் நாம் அப்படிச் செய்யவில்லை.

அத்தகைய அரசியல் வேறுபாடுகள் உள்வாரியாக மட்டுமே தெரிவிக்கப்படவேண்டும். அமெரிக்கா, இந்தியா அல்லது வேறு ஒரு நாட்டுத் தலைவர் அத்தகைய விதத்தில் நடந்தார் என்றோ சர்வதேச சமூகத்தின்முன் நாட்டின் உள்வாரியான வேறுபாடுகளைத் தெரிவித்தனர் என்றோ நாம் பார்க்கவில்லை.

ஏனைய அரசியற் கட்சிகளைப் போலவே ஜே.வி.பியும் ஜனாதிபதியுடன் வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. அவ்வாறே சிறிலங்கா சுந்திரக் கட்சி உட்பட வேறு சில குழுக்களும் வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. இவையெல்லாம் எமக்கிடையே விவாதிக்கப்படவேண்டியவையே என்று அந்தக் கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனைவிலை |
|---|---|---|
| அமெ. டொலர் | 99.38 | 100.27 |
| ஸ்ரேலிங் பவுண் | 183.21 | 185.77 |
| யூரோ | 124.78 | 126.86 |
| சுவிஸ் பிராங் | 80.53 | 82.38 |
| ஜென் | 0.9205 | 0.9377 |

## கருத்து...

இதேவேளை, இந்த மாநாட்டில் கலந்து கொண்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் பொதுக்கட்டமைப்பு எப்போது உருவாக்கப்படும் என்று கேட்டதற்கு – அதற்குரிய பதிலை அவர் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## விரைவில்....

தொடர்பாக அடுத்த சில நாட்களுக்குள் முக்கிய முடிவு எடுக்கப்படும். ஜனாதிபதி சந்திரிகாவுடன் தனிப்பட்ட ரீதியில் பேச்சுக்கள் நடத்தியபோது இதை உறுதிப்படுத்தினார்.

இந்தப் பொதுக்கட்டமைப்பின் உருவாக்கத்துக்கும், நடைமுறைப் படுத்தலுக்கும் சர்வதேச சமூகம் முழு ஆதரவை வழங்கும். அவ்வாறு உருவாக்கப்பட்டால், பல நன்கொடையாளி நாடுகள் இலங்கைக்கான உதவித் தொகையை பன்மடங்கு அதிகரிக்கத் தயாராக உள்ளன.

பொதுக்கட்டமைப்பை ஜனாதிபதி விரைவில் ஏற்படுத்த ஆர்வத்துடன் இருப்பதாக என்னால் உணரமுடிகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

## புத்தர்சிலை...

விளைவுகளை ஏற்படுத்தும் ஓர் அடித்தளமாகவே பார்க்கின்றோம். உடனடியாக சிலை அகற்றப்படாவிட்டால் எம்மால் முடிவு எடுக்கப்பட்ட மாற்று வழியைப் பயன்படுத்த உள்ளோம்.

இருப்பினும் இதற்கு உரிய முடிவு இல்லையேல்,இன்றும் எதிர்ப்பை தொடருமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. பொதுவான சட்டத்தை பாரபட்சமின்றி செயற்படுத்துமாறு பொலிஸ் நீதித்துறை சார்ந்தவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

தவறும் பட்சத்தில் தீர்மானிக்கப்பட்ட மாற்று வழிகள் பயன்படுத்தப்படும் என எச்சரிக்கின்றோம். எனவே, பின்னர் ஏற்படும் விளைவுகளுக்கு மேலே கூறப்பட்டவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

குளக்கோட்டன் படைப்பிரிவு என துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திருமலை நகரில் திடீரென அனுமதியின்றி புத்தர் சிலை அமைக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக வழக்கு விசாரணைகள் இன்று நடைபெறவுள்ளது. (10)

# விரைவில் பொதுக்கட்டமைப்பு உருவாகும்

## யசூசி அகாஷி நம்பிக்கை தெரிவிப்பு!

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வட–கிழக்கு பிரதேசத்தினை மீளக்கட்டியெழுப்புவதற்காக உத்தேசிக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு விரைவில் உருவாக்கப்படுமென தாம் எதிர்பார்ப்பதாக ஜப்பானிய அரசின் விசேட பிரதிநிதி யசூகி அகாஷி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கண்டியில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா ஆற்றிய உரை குறித்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது –

ஜனாதிபதி தனது கொள்கை, தலைமைத்துவத்தின் பொறுப்பினை தனது உரையின் மூலம் மக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் வேறுபட்ட கருத்துக்கள் இருப்பினும், பொதுக் கட்டமைப்பு விரைவில் உருவாக்கப்படுமென எதிர்பார்க்கிறேன். பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதன் மூலம் அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மட்டுமன்றி, முஸ்லிம் மற்றும் ஏனைய மக்களிடமும் ஒற்றுமையையும், நம்பிக்கையையும் கட்டியெழுப்பப்படும்.

இதன் மூலம் நாட்டை முன்நோக்கிக் கொண்டு செல்லமுடியுமெனத் தெரிவித்தார்.

# மாமனிதர் சிவராமின் நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரும், பிரபல அரசியல், இராணுவ விமர்சகருமான மாமனிதர் சிவராமுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சட்டநாதர் வீதி கல்வியங்காட்டில் அமைந்தள்ள இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

ஊடகவியலாளர் மாமனிதர் தராக்கி நினைவுதின ஏற்பாட்டுக்குழுவினரால் நடத்தப்படும் இந்த நினைவஞ்சலிக் கூட்டத்துக்கு யாழ்.பல்கலைக்கழக ஊடகப்பயிற்சி இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமை தாங்குகிறார்.

இந்த நினைவஞ்சலிக் கூட்டத்துக்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலைஞர், கலை இலக்கிய வாதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## ஏழு பேரின்...

மன்னாருக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதேவேளை காணாமல் போன ஏழுபேரையும் மீட்கும் பணியில் நேற்று கடற்படையினரும், மீனவர்களும் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் நெடுந்தீவில் நேற்று வெல்லா, பெரியதுறை ஆகிய இடங்களில் ஏழுபேரின் சடலங்கள் கரைஒதுங்கின. ஐந்து ஆண்கள், ஒருபெண், சிறுமி ஒருவருமாக ஏழு சடலங்கள் மீட்கப்பட்டன.

கரையொதுங்கிய நெடுந்தீவு கரையோரப் பிரதேசத்திற்கு சென்றிருந்த ஊர்காவற்துறை நீதிவான் அ.பிறேம்சங்கர் சம்பவ இடத்திற்குச் சென்று சடலங்களை அடையாளம் காண்பதற்காக யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்குமாறு உத்தரவிட்டார். இதனை அடுத்து சடலங்கள் நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டன.

இதேவேளை தமிழ் நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய மேலும் ஏழுபேரும் மன்னார் கடற்பரப்பில் மணல்த் திட்டி ஒன்றில் தங்கியிருப்பதாகவும் தெரியவருகிறது. (113)

## கண்டித்து நடத்தப்பட....

அல்லது அது காலவரையறையின்றி தொடரும் என்று தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் கூட்டத்தில் கூறினார்.

சிலை எக்காரணம் கொண்டும் அகற்றப்படமாட்டாது என்று பௌத்த பிக்குகள் திட்டவட்டமாக தெரிவித்தனர்.

இந்த நிலையில் சமரசம் ஏதுமின்றி கூட்டம் முடிந்தது.

இதேவேளை, காலை 11 மணியளவில் கடற்படைத்தள வீதியிலுள்ள நெல்சன் பட மாளிகைக்கு முன்பாக கைக்குண்டு ஒன்று கிடந்ததைக் கண்ட பொலிஸார் இதுபற்றி இராணுவத்துக்கு அறிவித்ததையடுத்து அவ் வீதி ஊடாக வாகனங்களோ, பொது மக்களோ செல்லவேண்டாம் என்று பொலிஸார் தடுத்தனர். பின்னர் அக் குண்டை அங்கிருந்து பாதுகாப்பாக அப்புறப்படுத்தினர்.

மூதூர் – திருமலை கடல்வழிப் போக்குவரத்து மற்றும் திருமலைக்கும் ஏனைய நகரங்களுக்கும் இடையிலான போக்குவரத்துக்கள் என்பனவும் இடம்பெறவில்லை.

நிலாவெளி, சாம்பல்தீவு, கும்புறுப்பிட்டி, இறக்கக்கண்டி, குச்சவெளி, தம்பலகாமம், ஆலங்கேணி, மூதூர் பகுதி முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணியளவில் திருகோணமலை – மடத்தடிச் சந்தியில் அமைந்துள்ள சிங்களவர் ஒருவருக்குச் சொந்தமான வாழைப்பழக் கடை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அந்தக் கடையில் இருந்த ஒருவர் கொல்லப்பட்டதுடன், நால்வர் படுகாயமடைந்தனர். இவர்கள் திருகோணமலை வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து ஏற்பட்ட பதற்றத்தைத் தணிப்பதற்காக திருகோணமலையில் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு நேற்று அமுல் படுத்தப்பட்டது. (10)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.05.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# க.பொ.த உயர்தர மாதிரி பரீட்சை வினாத்தாள் - 2005

## இரசாயனவியல்

V.C.அன்பழகன் B.Sc

(தொடர்ச்சி...)

**41** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்கான அறிவித்தல்.

முதலாங் கூற்று, இரண்டாங் கூற்றுத் தெரிவுகள்

| | | |
|---|---|---|
| உண்மை | உண்மையாக இருந்து 1ம்கூற்றுக்கு திருத்தமான விளக்கத்தை தருவது | (1) |
| உண்மை | உண்மையாக இருந்து 1ம்கூற்றுக்கு திருத்தமான விளக்கத்தை தராதது | (2) |
| உண்மை | பொய் | (3) |
| பொய் | உண்மை | (4) |
| பொய் | பொய் | (5) |

41. கூற்று 1:- $5^0C$ இல் $NaNO_2/HCl$ உடன் அனிலீன் தாக்கமுற்றால் ஈரசோனியம் உப்பு உருவாகும். ஆனால் எதயில் அமைன் தாக்கினால் எதனோல் உருவாகும்.

கூற்று 2:- ஏனெனில் $C_6H_5N_2^+$ அயனைவிட $C_2H_5N_2^+$ அயன் உறுதிகுறைவு.

**42.** கூற்று 1:- $NH_4^+$முன்னிலையில் $(NH_4)_2CO_3$ ஐச் சேர்ப்பதன் மூலம் $Mg^{2+}$ ஐ $MgCO_3$ ஆக வீழ்படிவாக்க முடியாது.

கூற்று 2:- $NH_4^+ + CO_3^{2-} \rightleftharpoons NH_3 + HCO_3^-$ ஆக அமைவதால் $CO_3^{2-}$ செறிவு $NH_4^+$ முன்னிலையில் குறைக்கப்படும்.

**43.** கூற்று 1:- $Pt / H_{2(g)} / H^+(0.1M)$ எனும் மின்வாயின் மின்வாயழுத்தம் எதிர் மதிப்புடையது.

கூற்று 2:- ஐதரசன் அயனின் செறிவைக் குறைக்கும் பொழுது $2H^+_{(aq)} + 2e \rightleftharpoons H_{2(g)}$ என்பதன் சமநிலை இடப்பக்கத்திற்கு நகர்த்தப்படும்.

**44.** கூற்று 1: அமில ஊடகத்தில் $Na_2SO_3$ உடன் $H_2S$ ஐ தாக்கம் புரியவிடும் போது விளைவாகும்

கூற்று 2: $H_2S$ தாழ்த்தி ஆக தொழிற்படக்கூடியது.

**45.** கூற்று 1:- ஐதரோக்குளோரிக்கமிலத்தின் ஐதான நீர்க்கரைசலொன்றின் வெப்பநிலையைக் கூட்டும் பொழுது, கரைசலின் அமிலத்தன்மை கூடுகின்றது.

கூற்று 2:- ஐதரோக்குளோரிக்கமிலத்தின் ஐதான நீர்க்கரைசலொன்றின் வெப்பநிலையைக் கூட்டும் பொழுது ஐதரசன் அயனின் செறிவு கூடுகிறது. ஏனெனில் நீரின் கூட்டப்பிரிவினளவு கூடுகின்றது.

**46.** கூற்று 1:- $CH_3COOH$ ஐயும் $CH_3COONa$ கொண்ட தாங்கற்கரைசலிற்கு $CH_3COONa$ சேர்க்கும்போது தாங்கற்கரைசலின் pH அதிகரிப்பு ஏற்படும்

கூற்று 2:- $CH_3COONa$ நீர்ப்பகுப்பில் அமிலத்தை விளைவிக்கக்கூடியது

**47.** கூற்று 1:- 1M NaOH ஐ 1 M HCl ஆல் நியமிக்கும்போது, மெதைல் செம்மஞ்சள் அல்லது பினோப்தலின் காட்டி உபயோகிக்கப்படலாம்

கூற்று 2:- வன்அமில, வன்கார நியமிப்பிற்கு அநேக காட்டிகள் எல்லா சந்தர்ப்பத்திலும் உபயோகிக்கப்படலாம்

**48.** கூற்று 1:- ஒரு மென்னமிலக் கரைசல் ஒன்றை ஐதாக்கும்போது அதன் pH குறையும்

கூற்று 2:- நீர்க்கரைசலிலுள்ள மென்னமிலத்தின் கூட்டற்பிரிவின் அளவு ஐதாக்கலுடன் கூடுகிறது.

**49.** கூற்று 1:- $H_2TeO_3$ இன் அமிலத்தன்மை $H_2SeO_3$ இன் அமிலத்தன்மையை விடக்குறைவு

கூற்று 2:- Te இலும் Se இனது மின் எதிர்த்தன்மை அதிகம்

**50.** கூற்று 1:- நீர் எதனோல் கலவையின் கொதிநிலை நீர், எதனோலின் தூய கொதிநிலையிலும் குறைவாகும்.

கூற்று 2:- நீர் – எதனோல் கலவை நேர்விலகல் கலவை ஆகும்



**51.** தரப்பட்ட சேர்வை ஒன்றில் $Ni^{2+} : NH_3 : H_2O : Cl = 1 : 4 : 2 : 2$ என்ற மூலவிகிதத்தில் அமைந்தது. சேர்வையின் சூத்திரமாக அமையக்கூடியது?



(1) $[Ni(NH_3)_4]Cl_2 . H_2O$  (2) $[Ni(NH_3)_4(H_2O)_2]Cl_2$

(3) $[Ni(H_2O)_2](NH_3)_4Cl_2$  (4) $[NiCl_2(H_2O)_2(NH_3)_4]$

(5) தகுந்த விடையில்லை

**52.** தரப்பட்டவற்றில் உறுதித்தன்மை கூடிய காபோனியமயன் எது?

(1) $CH_3\overset{+}{C}H_2$  (2)   (3) 

(4)   (5) 

**53.** $CH_3 – O – H$ இன் பிரிகையின்போது பெரும்பாலும் இருக்க முடியாதது எது?

(1) $CH_3^+ , OH^-$  (2) $CH_3O^- , H^+$  (3) $CH_3^0 , {}^0OH$

(4) $CH_3O^0 , H^0$  (5) $CH_3^- , OH^+$

**54.** 4d தாண்டல் மூலகங்கள் அணுவெண் ஏறுவரிசைப்படி பின்வருமாறு அமையும்

Y, Zr, Nb, Mo, Tc, Ru, Rh, Pd, Ag, Cd இவற்றின் உருகுநிலை பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

(1) ஆகக்குறைந்த உருகுநிலை கொண்டது Cd

(2) Cd இற்கு அடுத்ததாக உருகுநிலை குறைந்தது Ag

(3) Mo ஐ விட , Tc இன் உருகுநிலை குறைவு

(4) Rh இலும் Pd உருகுநிலை அதிகம்

(5) Zr இலும் Nb இன் உருகுநிலை அதிகம்

**55.** Sc பற்றிய கூற்றுகளில் பிழையானது எது?

(1) 3d வரிசை மூலகங்களில் ஆகக்குறைந்த அடர்த்தி உடையது

(2) 3d வரிசை மூலகங்களில் ஆகக்குறைந்த மின் எதிர்த்தன்மை உடையது

(3) 3d வரிசை மூலகங்களில் மிகப்பெரிய அணுஆரை உடையது

(4) 3d வரிசை மூலகங்களில் மிகக் குறைந்த உருகுநிலை உடையது


(5) 3d வரிசை மூலகங்களில் +2 ஒட்சியேற்ற நிலையைக் காண்பிக்காதது

**56.** தரப்பட்டவற்றில் எந்தச்சேர்வை அதிஇழிவு மூலத்தன்மையைக் கொண்டது?

(1) $NH_3$  (2) $NF_3$  (3) $NCl_3$  (4) $NBr_3$  (5) $NI_3$

**57.** தரப்பட்டவற்றில் அமிலத்தன்மை கூடியது எது?

(1) $CH_3CH_2OH$  (2) $CH_3NH_3^+$  (3) $HC \equiv CH$

(4)  OH  (5) $H_2C = CH_2$

**58.** LiF நீரில் கரைவது அரிது. ஆனால் KF நீரில் நன்கு கரையும். இதனைச் சரியான முறையில் விபரிப்பது?

(1) $K^+$ அயன்களைப்போல் நன்றாக நீரேற்றப்பட்டால், Li இல் காணப்படுவதில்லை

(2) LiF பங்கீட்டு வலுச்சேர்வை

(3) நீரேற்ற சக்தி LiF இலும் KF இற்குக் குறைவு

(4) LiF இன் சாலகசக்தி KF இலும் நன்கு உயர்வு

(5) சரியான விடை இல்லை

**59.** பின்வரும் ஒட்சைட்டுகளைக் கருதுக

(A) $V_2O_5, CrO_3$  (B) $Sc_2O_3, CrO$  (C) $C_{O2}O_3, Fe_2O_3$  (D) $MnO_3, Mn_2O_7$

எச்சோடிகள் அமில ஒட்சைட்

(1) A , B மட்டும்  (2) A , B , C  (3) A, D மட்டும்

(4) A , B , D மட்டும்  (5) A மட்டும்

**60.** சூடாக்கலின்போது அமிலநீரிலியை தரக்கூடியது?

(A) $CH_2(COOH)_2$  (B) $(CH_2COOH)_2$

(C) $CH_2CH_2(COOH)_2$  (D) $CH_2(CH_2CH_2COOH)_2$

(1) A , B மட்டும்  (2) A , B , C  (3) B மட்டும்

(4) A , B , D மட்டும்  (5) A மட்டும்

# க.பொ.த உயர்தர மாதிரி பரீட்சை வினாத்தாள் - 2005

## பொருளியல்

பகுதி I

R.இராஜேஸ்வரன் B.Com. dip in Ed.
யாழ். மத்திய கல்லூரி


(1) எந்தவொரு சமூகமும் தமது தேவைகளை நிறைவு செய்தல் தொடர்பாக தெரிவுப் பிரச்சினையை ஏன் தவிர்க்க முடியாதுள்ளது.
1. வளங்கள் மூலம் அனைத்து தேவைகளையும் நிறைவு செய்ய முடிதல்.
2. வளங்கள் வரையறுக்கப்பட்டும், பல பயன்பாட்டுத் தன்மையையும் கொண்டிருத்தல்
3. மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாதிருத்தல்.
4. சமூகம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளல்.

(2) முயற்சியாண்மையின் சிறப்பியல்பை இனம் காண்க?
1. உற்பத்திச் செயற்பாட்டில் எதிர்க்கணிய வருமானம் பெறல்.
2. முகாமைத்துவத்தை சிறப்பாக முன்னெடுத்தல்.
3. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வும், காரணிச் சேவைகளை ஒழுங்கமைப்பதும்.
4. உற்பத்திச் செயற்பாடுகளை அமுல்படுத்தல்.

(3) 'வளங்களின் விளைதிறன்' என்பதன் மிகச் சரியாக விபரிக்கும் கூற்று எது?
1. உள்ளீடுகளில் ஏற்படும் அதிகரிப்பைவிட, வெளியீடுகளில் ஏற்படும் அதிகரிப்பு அதிகமாக இருத்தல்.
2. ஓரலகு உள்ளீட்டின் மூலம் பெறப்படும் வெளியீட்டினளவாகும்.
3. குறித்த உற்பத்திச் செயற்பாட்டின் மூலம் பெறப்படும் மொத்த வெளியீடாகும்.
4. ஓரலகு வெளியீட்டின்மூலம் பெறப்படும் உள்ளீட்டினளவாகும்.

(4) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியானது பின்வருவனவற்றில் எத்தகைய நிலையை பிரதிபலிக்கும்.
1. உற்பத்தியின்போது செயற்படும் முக்கியமான பொருளாதார விதியாகும்.
2. சாதனங்களின் உபயோக மட்டத்திற்கும், வெளியீட்டுக்கும் இடையிலான இணைப்பை புலப்படுத்துவதாகும்.
3. முயற்சியாளன் வளங்களின் இணைப்பு பற்றித் தீர்மானிக்கும் முக்கியமான விதியாகும்.
4. உற்பத்திக் காரணிகளின் இணைப்புத் தன்மைக்கு ஏற்ப வெளியீடுகள் எவ்வாறு மாற்றமடைந்து செல்லும் என்பதனைப் புலப்படுத்துவதாகும்.

(5) கியூ எஸ் = 50 + 10 p என்ற சார்புக்குரிய கோட்டைப் பின்வரும் வரைபில் காட்டுக?




(6) இரண்டு பண்டங்களுக்கிடையிலான கேள்வியின் குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி 0.5 ஆயின், மிகச்சரியான கூற்றை இனங்காண்க?
1. தொடர்புடைய பண்டம் இணைப்புப் பண்டமாகும்.
2. ஒரு பண்டத்தின் விலை 20 சதவீதம் அதிகரிக்க, மற்றைய பண்டத்தின் கேள்வி 10 சதவீதம் அதிகரிக்கும்.
3. ஒரு பண்டத்தின் விலை 10 சதவீதம் அதிகரிக்க, மற்றைய பண்டக் கேள்வி 50 சதவீதம் குறையும்
4. தொடர்புடைய பண்டங்கள் இணைப்புப் பண்டங்களாகும்.

(7) QDp 7000-1000P என்ற கேள்விச் சமன்பாட்டினைக் கருதிக் கொள்க. இப்பொருளின் கேள்வி நெகிழ்சிக்குணமே குறைந்த விலை எது
1) 7ரூபா 2) 4 ரூபா 3) 3 ரூபா 4) 5 ரூபா

(8)நிறுவனமொன்றின் மொத்தச் செலவு நடத்தை பல்வேறு வெளியீட்டு மட்டங்களில் வருமாறு தரப்படுகின்றது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வெளியீடு (Q) | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
| மொத்தச்செலவு (Tc) | 20 | 100 | 140 | 200 | 280 | 300 |

2 ஆவது அலகினை வெளியிடும் போது சராசரி நிலையான செலவு யாது?
1) 10 2) 30 3) 25 4) 50

(9) சந்தையமைப்புக்களிலே கடுமையான விளம்பரத்தைக் கொண்ட சந்தையமைப்பு எது?
1)நிறை போட்டி 2) சிலருரிமை 3) தனியுரிமை 4)தனியுரிமைப்போட்டி

10) பின்வரும் கூற்றுக்களில் சரியானதை இனம் காண்க.
1. கேள்வி நெகிழ்ச்சி வாய்ந்த பொருட்கள் பதிலீடுகளற்றது.
2. வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சிக்கு அதிகமாயின், அவை ஆடம்பரப் பொருளாகலாம்.
3. கேள்வியின் விலை நெகிழ்ச்சி பூச்சியமாயின், உற்பத்தியாளனே வரியைச் செலுத்துவான்.
4. குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி நேர்க்கணியமாக இருக்க முடியாது.

(11) பூரணமான போட்டி நிலவும் சந்தை ஒன்றிலே காணப்படும் எல்லா நிறுவனங்களும் ஒரே விலையினை அறவிடக் காரணம்.
1. இச் சந்தையில் காணப்படும் நிறுவனங்களின் சந்தைப் பகுதி குறைவாக இருத்தல்.
2. அனைத்து நிறுவனங்களுக்கும் ஒரே விலை காணப்படல்
3. விற்கப்படும் பொருட்கள் பூரண பதிலீட்டுத் தன்மை வாய்ந்தன
4. நிறுவனங்கள் அனைத்தும் இலாபத்தை உச்சப்படுத்துவதனால் ஆகும்

(12) வெளிவாரி விளைவுகள் சந்தையில் பிரதிபலிக்கப்படாமைக்கான காரணம்
1. அரசு இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதனால்
2. வெளிவாரிகள் அமையச் செலவினை உள்ளடக்குவதால்
3. உற்பத்தி, நுகர்வு பற்றிய தீர்மானங்களில் கவனத்தில் கொள்ளாமை
4. சந்தை தோல்வியடைதல்.

(13) தவறான கூற்றினை இனம் காண்க.
1. தேறிய காரணி வருமானத்துடன் வணிகப் பொருள் சேவைகள் வருமானக் கணக்கின் மீதியைச் சேர்ப்பதன் மூலம்தேசிய வெளிநாட்டு முதலீடு பெறப்படும்
2. உள்நாட்டு உற்பத்தியானது உள்நாட்டு உற்பத்திகள் மீது மேற்கொண்ட செலவாகும்
3. இல்லத் தலைவியரின் சேவைகள் தேசிய உற்பத்தி மதிப்பீட்டில் சேர்க்கப் படுவதில்லை
4. ஒரு பொருளாதாரத்தின் முதலீடுகள் சேமிப்புக்கு சமனாகக் காணப்பட்டு சமநிலை ஏற்படலாம்.

(14) எளிய பொருளாதாரமொன்றில் சராசரி நுகர்வு நாட்டம் 0.75, முதலீட்டு மட்டம் 400 மில்லியன்கள் எனவும் கருதுக. சமநிலை வருமான மட்டம் யாது?
1) 500 2) 700 3) 1200 4)1600

(15) ஒரு நாட்டின் மொத்த மூலவளங்கள் பின்வரும் எந்த வழிகளில் பயன்படுத்தப்படுகின்றன.
1. மொத்த உள்நாட்டு நுகர்வும், முதலீடும்
2. பொருட்கள் காரணி அல்லாத சேவைகளின் ஏற்றுமதி
3. மொத்த உள்நாட்டு உற்பத்தி
4. பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் இறக்குமதி

(16) வருமான அணுகுமுறையில் மொத்தத் தேசிய உற்பத்தியினை மதிப்பிடும் போது எவை நீக்கப்படுகின்றன.
1. அரசு பெற்ற வட்டி வருவாய்
2. பகிரப்படாத இலாபங்கள்
3. அரசின் வரி வருமானம்
4. இலாபங்களும், பங்கு இலாபங்களும்
5. அரசின் வரியல்லா வருமானம்
6. பெறுமானத் தேய்வு
7) அரசிடம் இருந்தான வட்டி வருவாய்
8. ஓய்வூதியம்

(17) பொதுப் பண்டம் ஒன்றின் இரு பிரதான இயல்புகளும் எவை
1).அமையச் செலவு பூச்சியமாக இருத்தல்
2. அரசினால் வழங்கப்படுதல்
3. போட்டித்தன்மையற்றது
4.விலக்குதல் விதி தொழிற்படாமை
5. எல்லைச் செலவு பூச்சியம்

(18) அரசினால் விதிக்கப்படுகின்ற மறைமுக வரியானது நுகர்வோரை மட்டும் பாதிக்கப்படுகின்ற நிலைமைகளை இனங்காண்க.
1).நிரம்பல் நெகிழ்ச்சி பூச்சியமாக இருத்தல்
2. நிரம்பல் நெகிழ்ச்சி முடிவிலியாக இருத்தல்
3. கேள்வி நெகிழ்ச்சி ஒருமையாக இருத்தல்
4. கேள்வி நெகிழ்ச்சி பூச்சியமாக இருத்தல்
5. கேள்வி நெகிழ்ச்சி முடிவிலியாக இருத்தல்

(19) 2003 ஆம் ஆண்டிற்கு இலங்கையின் பின்வரும் வரிகள் மொத்த வரிவருமானத்தில் எத்தனை பங்கைக் கொண்டுள்ளது.
1. வருமானவரி
1) 13% 2) 12% 3) 15% 4) 17%

2. பொருட்கள் சேவைகள் வரி
1) 50% 2) 60% 3)67% 4)65%

(20) 2003 ஆம் ஆண்டிற்கு இலங்கையின் பின்வரும் செலவு பகுதிகள் மொத்தச் செலவில் எத்தகைய பங்கைக் கொண்டுள்ளது.

1. நடைமுறைச் செலவு
1) 82% 2) 85% 3) 90% 4)95%

2. வட்டிக் கொடுப்பனவுகள் (நடைமுறைச்செலவில்)
1) 30% 2) 25% 3) 37% 4)140%